பக்கங்கள்:12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 02 ஞாயிற்றுக்கிழமை 16.03.2025 கதிர் 128

# தமிழ் பெண்கள் மீதான படையினரின் பாலியல் வன்கொடுமைக்கு நீதி எங்கே?

## சாணக்கியன் எம்.பி. நாடாளுமன்றில் கேள்வி

இராணுவத்தினர் தமிழ்ப் பெண்களை பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கியதற்கான நீதி எப்போது கிடைக்கும் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அநுராதபுரம் வைத்தியசாலையின் வைத்தியர் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளான சம்பவத்தை வன்மையாக கண்டிக்கிறோம். குற்றவாளிக்கு கடுமையான



தண்டனை வழங்க வேண்டும் .இந்த நாட்டில் இனியொருபோதும் இவ்வாறான சம்பவங்கள் தோற்றம் பெறாமல் ☞2

## இனி இது ரகசியம் அல்ல!

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ் காங்கிரஸ் தலைமையில் ஒரு புதிய கூட்டணி உருவாகும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால், அதுவும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் 9 கட்சிக் கூட்டுப் போன்று அடிமட்டத்தில் பிசுபிசுப்பதாகவே தகவல். இந்தக் கூட்டுக்கான பேச்சுக்களில் காங்கிரஸின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதும், ☞2

## குழு நியமனம்

அனுராதபுரம் போதனா வைத்தியசாலை நிர்வாகத்தினருக்கு உரிய பாதுகாப்பு மற்றும் வசதிகளை வழங்குவது தொடர்பில் ஆராய்ந்து அறிக்கையை வழங்குவதற்காக சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் அனில் ஜாசிங்கவினால் மூவர் அடங்கிய குழுவொன்று ☞8

## தேசபந்துவின் மனைவி, மகனிடம் வாக்குமூலங்கள் பெற்ற பொலிஸார்

நீதிமன்றத்தைத் தவிர்த்து வரும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனின் மனைவி மற்றும் மகனிடமிருந்து குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் வாக்குமூலங்களைப்பதிவுசெய்துள்ளனர்.

அவர்களின் ஹோகந்தரவில் உள்ள வீட்டிற்குச் சென்ற குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் குழு இந்த வாக்குமூலங்களைப் பதிவு ☞2

# போர்க் குற்றச்சாட்டுக்களுக்கு தேசிய கட்டமைப்பு மூலம் தீர்வு

## அமைச்சர் விஜித ஹேரத் அறிவிப்பு

போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களுக்கு தேசியக் கட்டமைப்பின் ஊடாகவே தீர்வு காணப்படும் என்று அயலுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் மற்றும் சுற்றுலாத்துறை அபிவிருத்தி அமைச்சர் விஜித்த ஹேரத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று சனிக்கிழமை வரவு செலவுத் திட்டத்தின் அயலுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் மற்றும் சுற்றுலாத்துறை அபிவிருத்தி அமைச்சு மீதான விவாதத்தில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நாடு என்ற அடிப்படையில் பல சவால்களை எதிர்கொண்டுள்ளோம். இலங்கை தொடர்பில் கடந்த காலங்களில் பல பிரேரணைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்த பிரேரணைகள் மீதான வாக்கெடுப்பு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ளது.

நாடு என்ற ரீதியில் இவ்விடயத்தில் தலையிடுவதற்கு தீர்மானித்துள்ளோம். இலங்கையில் மனித உரிமைகளை பாதுகாப்பதற்கும், உள்ளக பொறிமுறையின் கீழ் இலங்கையின் சட்டவாட்சி, ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கும், தேசிய நல்லிணக்கம் மற்றும் இனஒருமைப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கான நிறுவன ☞2

# போர்க்குற்ற விசாரணைகளுக்கான வெளிப் பொறிமுறையில் ஏன் அச்சம்?

## ஆளும்தரப்பிடம் கஜேந்திரகுமார் கேள்வி

போரின் போது நிகழ்ந்த மனித உரிமை மீறல்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் குறித்து விசாரிப்பதற்கான வெளிநாட்டுப் பொறிமுறைக்கு இந்த ☞8

# கொலை செய்வதற்கு ஜேவிபிதான் புலிகளுக்கும் கற்றுக்கொடுத்தது

## முன்னாள் அமைச்சர் கருத்து

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிற்கும் கொலை, கொள்ளை கலாசாரத்தை மக்கள் விடுதலை முன்னணியே (ஜே.வி.பி.) கற்றுக் கொடுத்தது. எனவே தற்போது நாட்டில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் இவ்வாறான சம்பவங்களைக் கட்டுப்படுத்துவதற்கான சிறந்த இயலுமை இந்த ஆளும்தரப்பிடமே காணப்படுகின்றது என்று முன்னாள் அமைச்சர் திஸாநாயக்க தெரிவித்தார்.

கண்டியில் வெள்ளிக்கிழமை ☞8

## நாடாளுமன்றில் நாமல் தெரிவிப்பு

# படையினர் போர்க் குற்றங்களில் ஈடுபட்டனர் என்று ஏற்கமுடியாது

## நாட்டை காட்டிக்கொடுக்காத ரணிலுக்கும் நன்றி கூறினார்

படையினரில் ஒருசிலர் ஏதேனும் குற்றச்செயல்களில் ஈடுபட்டிருக்கலாம். இதனை முழுப் படையினருடனும் தொடர்புபடுத்தி அவர்கள் போர்க் குற்றத்திலும், பாலியல் துர்நடத்தையிலும் ஈடுபட்டனர் என்று குற்றஞ்சாட்டுவதை ஏற்க முடியாது. சாணக்கியன் முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் காலத்துக்குப் பொருத்தமற்றவை என்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ☞8

# இந்திய மீனவர்களின் செயற்பாட்டால் இந்து சமுத்திரமே பாலைவனமாகும்

## மீன்பிடித்துறை அமைச்சர் குற்றச்சாட்டு

இந்திய மீனவர்கள் இழுவைபடகை பயன்படுத்தி அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு கடல்வளத்தை அழித்தால் இந்து சமுத்திரமே பாலவனம் ஆகக்கூடும் என்று கடற்றொழில் மற்றும் நீரியல் கடல் வளங்கள் அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்தார்.

இலங்கை இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பாக அமைச்சர் கச்சத்தீவில் தமிழ்நாட்டு மீனவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார். அதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார். ☞2

# நளீம் எம்.பியின் பதவி விலகல் முஸ்லிம்களின் சரித்திர நிகழ்வு

## மு.கா. செயலாளர் பாராட்டு

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் எம் எஸ் நளீம் தனது பதவியை இராஜினாமாச் செய்தது முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் சரித்திரத்தில் மாத்திரம் அல்லாமல் இலங்கை முஸ்லிம்களின் அரசியல் சரித்திரத்திலேயே ஒரு தாக்கத்தை உருவாக்கிய நிகழ்வு என்று முஸ்லிம் காங்கிரஸ் (முகா) கட்சியின் ☞2

# கொலைக் கலாசாரத்திற்கு முற்றுப்புள்ளி வையுங்கள்

## எதிர்க் கட்சித் தலைவர் நேற்றும் வலியுறுத்து

நாட்டில் இடம்பெற்றுவரும் மிலேச்சத்தனமான கொலைகள் மற்றும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பொது மக்கள் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமைவதுடன் சுற்றுலாத்துறைக்கும் பாதிப்பாக அமையும். அதனால் கொலை கலாசாத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க ஆளும்தரப்பு விரைவாக நடவடிக்கை எடுக்கவேண்டு மென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இரண்டு நாட்களில் இரண்டாவது தடவையாக அவர் இந்த விடயத்தை வலியுறுத்தியுள்ளார்.

அவர் நேற்று நாடாளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டத்தின் வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றினார். அவர் அங்கு தெரிவித்ததாவது:

இந்தப் பிரச்சினை தொடர்பில் நேற்றைய தினம் தெரிவித்திருந்தேன் இன்றைய தினமும் தெரிவிக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. அக்மீமன பூஸ்ஸ கொலை, தல்தன மீகாகியுல கொலை, அமுனுகொலபெலஸ்ஸ கொலை, வெலிவேறிய துப்பாக்கி பிரயோகம், ☞8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

காங்கிரஸ்தான் பெரிய கட்சி என்று அதற்குத் தலைவணங்கிச் செல்வதும் மற்றக் கட்சிகளுக்குப் பிரச்சினையாக இருப்பதாகக் கூறப்படுகின்றது. இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தமிழ் அரசுக் கட்சி முதன்மை இடத்தைப்பெற்றுதக்கவைத்துக்கொண்டதற்கு ஒப்பானதாக எதிர்காலத்தில் மாறிவிடக்கூடும் என்று அவர்கள் அஞ்சுகின்றார்கள்.

இதனால் ஆங்காங்கே சில உதிரிகள் மட்டுமேதமிழ்காங்கிரஸில்சேர்ந்துகொள்ளும் நிலையே இப்போதைக்கு உறுதியாகி இருக்கின்றது. நேற்று ஜனநாயகத் தமிழ் அரசுக் கட்சி என்று கூறிக்கொண்டு இயங்குபவர்களில் ஒரு பகுதியினர் தாம் காங்கிரஸுடன் சேர்ந்து போட்டியிடப் போகிறார்கள் என்ற அறிவித்தனர்.

தமிழ் அரசுக் கட்சியின் வேலணை பிரதேச சபை முன்னாள் உறுப்பினரும் சட்டத்தரணி தவராசாவின் தீவிர ஆதரவாளருமான நாவலன் நேற்று யாழ்ப்பாணத்தில்செய்தியாளர்களைச்சந்தித்து ஜனநாயகத்தமிழரசுக்கட்சிஉள்ளிட்ட மேலும் சில கட்சிகள் மற்றும் அமைப்புகள் தமிழ் காங்கிரஸுடன் இணைந்துள்ளன எனவும், இந்தப் புதிய கூட்டு சைக்கிள் சின்னத்தில் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்கொள்ளவுள்ளது எனவும் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கொள்கைகளை முழுமையாக ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில் இந்தக் கூட்டு ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

"தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் தலைமையில் இன்று பல கட்சிகள் இணைந்துள்ளன. அதன் ஓர் அங்கமாக ஜனாதிபதி சட்டத்தரணி தவராசாவின் வழிநடத்தலில் ஜனநாயகத் தமிழ் அரசுக் கட்சி இந்தக் கூட்டணியில் இணைந்து எமது தமிழ் மக்களின் தீர்வுக்காகவும், மக்களின் அடிப்படைத் தேவை மற்றும் பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் முகமாகவும் செயற்படவுள்ளது.

இந்த நோக்கத்துக்காக ஏனைய கட்சிகளும் ஒன்றிணையவேண்டும் என்ற கோரிக்கையை விடுக்கின்றோம். சிங்களப் பேரினவாதத்தின் ஒற்றர்களால் தமிழினத்தின் அரசியல் கேள்விக்குறியாக உள்ளது. இந்த விடயத்தை மக்கள் உணர்ந்து செயற்பட வேண்டிய காலத்தின் கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

இந்தக் கூட்டணியில் ஜனநாயகத் தமிழ் அரசுக் கட்சியுடன், தமிழ்த் தேசிய பசுமை இயக்கம், தமிழ்த் தேசியக் கட்சி மற்றும் தென்மராட்சியின் அருந்தவபாலன் தரப்பும் இணைந்துள்ள அதேவேளை மேலும் சில தமிழ்த் தேசிய அமைப்புக்கள் இந்தக் கூட்டணியில் இணையும் என எதிர்பார்க்கின்றோம்.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மக்களுக்குப் பழக்கப்பட்ட சின்னம் என்பதன் அடிப்படையிலும் மக்களுக்குக் குழப்பங்களை ஏற்படுத்தக்கூடாது என்ற காரணத்தின் அடிப்படையிலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பெயர் மற்றும் சின்னத்தில் போட்டியிடவுள்ளோம்" - என்றார்.

நாவலன் இப்படிக் கூறினாலும் இந்தக் கூட்டு இன்னமும் முழுமையாக உறுதி செய்யப்படவில்லை என்பதே சரியான செய்தியாக உள்ளது. இந்தக் கூட்டுக்குள் தமது கட்சிகளுக்கோ தரப்புக்களுக்கோ சம அந்தஸ்துக் கிடைக்காது என்று அவற்றின் தலைவர்களுக்கு உள்ள அச்சம், அல்லது அதனை உறுதிப்படுத்த வேண்டியிருப்பதன் அவசியம் என்பன கூட்டுக் கனிவதற்கு இன்னும் தடையாக இருக்கின்றன. தமது கூட்டுக்குள் வருவதற்கு கஜேந்திரகுமாரையும் காங்கிரஸையும் ஏகத் தலைமையாக ஏற்று சரணாகதி அடையவேண்டும் என்பது அந்தத் தரப்பின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது. மூத்த அரசியல்வாதியான சிறீகாந்தா மற்றும் ஐங்கரநேசன் ஆகியோருக்கு இதில் முழுமையான உடன்பாடில்லை. தமது தனித்துவத்தைஇழந்துசரணாகதிஅடைவதற்கு அவர்கள் தயாராக இல்லை. அதனால் இந்தக் கூட்டு அமைந்தாலும் அது இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வாய்ப்பை காங்கிரஸ் தவிர்ந்த மற்றைய தரப்புக்கள் பெற்றுக்கொள்வதற்கானதாக இருக்குமே தவிர புதிய கூட்டணியாவதற்கான வாய்ப்பாக இருக்காது என்று முழுமையாக விவரமறிந்தவர்கள் கூறுகின்றனர்.

வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கு இடையில் உண்மை அம்பலத்திற்கு வந்துவிடும், அது வரை பொறுத்திருக்கலாம்.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## தமிழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்க வேண்டும்.

இந்த நாட்டில் 1000இற்கும் மேற்பட்ட தமிழ் பெண்கள் இராணுவத்தினரால் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்கள். அநுராதபுரம் சம்பவத்துக்கு ஆளும்தரப்பும், நாட்டுமக்களும் கொந்தளிப்பதை போன்று ஏன் தமிழ் பெண்கள் படுகொலை செய்யப்பட்டபோது கொந்தளிக்கவில்லை?

சிறந்த உதாரணமாக எமது இசைப்பிரியாவை குறிப்பிடமுடியும். இறுதிப் போரின்போது இசைப்பிரியா உயிருடன் இருந்தமைக்கான சாட்சியங்கள் பல வெளியாகின. கைகள் பின்னால் கட்டப்பட்ட நிலையில் உயிருடன் இருந்த இசைப்பிரியாவின் புகைப்படங்கள் வெளியாகின. பின்னர் ஆடையின்றி இருக்கும் காணொளிகள் வெளியாகின.

இசைப்பிரியா ஒரு பெண் இல்லையா? அவருக்கு இந்தநாட்டில் நீதி தேவையில்லையா? படுகொலை செய்யப்பட்ட தமிழ் பெண்களுக்கு நீதியை வழங்க ஏன் இலங்கை ஆளும்தரப்புக்கள் அக்கறைகொள்வதில்லை? முடிந்தால் விசாரணை செய்து சட்டத்தை நிலைநாட்டுங்கள். இராணுவத்தினர் கூட்டு பாலியல் வன்கொடுகைளிலும் ஈடுபட்டார்கள். இந்த அநீதிகளுக்கு எப்போது நீதி கிடைக்கும்?

பாதிக்கப்பட்ட எமது சமூகம் தொடர்ந்து நீதியை கோருகிறார்கள். குற்றவாளிகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்துக்கொண்டு இந்த ஆளும்தரப்பும் செயற்படுகிறது. பொறுப்புக்கூறல் விவகாரத்தில் ஆளும்தரப்பு தோல்வியடைந்துள்ளது - என்றார்.

## நளீம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலாளர் நாயகமும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் தெரித்தார்.

அவர் நேற்று செய்தியாளர்களிடம் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

முஸ்லிம்காங்கிரஸ்சரித்திரத்தில்கட்சியின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு தனக்கு வழங்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை நான்கு மாதங்களுக்குள் விட்டுக்கொடுத்தது வரலாற்றில் இதுவே முதல் தடவை.

கட்சியின் செயலாளர் என்ற வகையில் இது குறித்து நான் மிகவும் பெருமிதமும், மகிழ்ச்சியும் அடைந்துள்ளேன். கட்சி சார்பாக என்னுடைய நன்றிகளை அவருக்கு தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

அவரது பதவி விலகலால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்திற்கு உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடியும்வரை எவருக்கும் நியமிக்கப்படமாட்டார்கள். அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வேண்டும் என்று எதிர்பார்ப்பவர்கள் நடைபெறவுள்ள உள்ளூராட்சிமன்றத்தேர்தலில்தங்களுடைய செல்வாக்கைபயன்படுத்தித்தமதுசபைகளைக் கைப்பற்றி ஆட்சியை அமைக்கவேண்டும். அதற்கான சகல எற்பாடுகளையும் செய்து பணியாற்றவேண்டும்என எதிர்பார்க்கிறோம்.

இந்தநாடாளுமன்றஉறுப்பினர்பதவியைச் சுழற்சி முறையில் ஒரு வருடத்துக்கு ஒருவர் என்ற முறையில் பகிர்ந்தளிப்பது என்று கட்சி தீர்மானித்துள்ளது. அந்த வகையில் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் தவிசாளர்கள், உயர்பீட உறுப்பினர்கள் தங்களது சபைகளை வெல்ல வைத்தால் கட்சி உங்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் தந்து உங்களையும் உங்களது பிரதேசத்தையும் கௌரவப்படுத்தும் என்றார்.

## இந்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் தெரிவித்ததாவது:

கடந்த முறை இந்திய பக்தர்கள் பங்கேற்கவில்லை. இம்முறை பங்கேற்றிருந்தனர். கச்சத்தீவு திருவிழாவை எதிர்காலத்தில் மேலும் சிறப்பாக நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

இராமேஸ்வரத்தின் அனைத்து மீனவ கூட்டமைப்பின் தலைவர் ஜேசுராஜ் மற்றும் சங்க உறுப்பினர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டேன்.

இலங்கை, இந்திய மீனவர் பிரச்சினையென்பது நீண்டகாலமாக நிலவும் பிரச்சினை. இதற்கான தீர்வு தொடர்பில் நீண்டகாலமாகக் கலந்துரையாடப்பட்டுவருகின்றது.

இந்திய மீனவர்களை கைதுசெய்யவேண்டும், சிறையில் அடைக்க வேண்டும் என நாம் நினைக்கவில்லை.

அதற்கான தேவைப்பாடும் எமக்குக் கிடையாது. எமது கடல்எல்லைக்குள் அத்துமீறி நுழைவதாலும், தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைமையைப் பயன்படுத்துவதாலு-மே அவர்கள் கைது செய்யப்படுகின்றனர்.

இந்திய மீனவர்கள் இழுவை படகை பயன்படுத்திஅத்துமீறிமீன்பிடிநடவடிக்கையில் ஈடுபட்டு கடல்வளத்தை அழித்தால் இந்து சமுத்திரமே பாலவனம் ஆகக்கூடும்.

போரால் பாதிக்கப்பட்ட வடக்கு மீனவர்கள் இன்னும் மீண்டெழவில்லை. இந்நிலையில் தமிழக மீனவர்கள் அவர்களின் வளங்களை அழிக்க முற்படுவது ஏற்புடையது அல்ல - என்றார்.

## ஈஸ்டர் தாக்குதலின்

# 6ஆவது நினைவு தினத்திற்கு முன் நீதியை எதிர்பார்க்கும் கர்தினால்

ஈஸ்டர் தாக்குதலின் ஆறாவது ஆண்டு நிறைவிற்கு முன்னர் நீதி நிலைநாட்டப்படும் என்று நம்புவதாக பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

கொழும்பு பேராயர் இல்லத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார், நீதி நிலைநாட்டப்படாவிட்டால் போராட்டங்களில் ஈடுபட வேண்டியிருக்கும் என்றும் சுட்டிக்காட்டினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பாக நாட்டை ஆண்டவர்கள்வாக்குறுதிகளை அளித்தனர். ஆனால், ஒன்றைக்கூட நிறைவேற்றவில்லை. அந்த அமைப்பை மாற்றுவதற்காக இந்த ஆளும்தரப்பை ஆட்சிக்குக் கொண்டுவர நாங்கள் பாடுபட்டோம். ஆனால் ,அந்த அமைப்பு மாறவில்லை என்றால், நாம் மீண்டும் சிந்திக்க வேண்டியிருக்கும்.

ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பாகக்கூட, கட்டுவாபிட்டி தேவாலயத்தில் ஜனாதிபதி அளித்த வாக்குறுதியை நிறைவேற்றவேண்டும் என்றும், விரைவில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் நாங்கள் இன்னும் கோருகிறோம். தாக்குதலின் 6ஆவது ஆண்டு நிறைவுக்கு முன்னர் ஆளும்தரப்பிடமிருந்துஇதுதொடர்பாக நியாயமான சமிக்ஞை கிடைத்தால் நாங்கள் மகிழ்ச்சியடைவோம். இல்லையெனில், நாங்கள் மீண்டும் வீதிகளில் இறங்க வேண்டியிருக்கும் என்றார்.

# ஏப்ரல் முதல் வராத்தில் இந்திய பிரதமர் வருகை

இந்திய பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும்ஏப்ரல்மாதம்முதல்வாரத்தில் இலங்கைக்கு வருகை தரவுள்ளார். சம்பூர் சூரிய மின் உற்பத்தித் திட்டம், மஹவ -அனுராதபுரம் தொடருந்துப் பாதை ஆகியவற்றை அவர் திறந்து வைப்பார். இந்திய பிரதமரின் இந்தஅரசமுறை பயணத்தின்போது புதிய பல ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படும் என அயலுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்ஷ்துறைஅபிவிருத்தி அமைச்சர் விஜித்த ஹேரத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற வரவு செலவுத் திட்டத்தின் அயலுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் மற்றும் சுற்றுலாத்துறை அபிவிருத்தி அமைச்சு மீதான விவாதத்தில் உரையாற்றியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது நட்பு நாடான இந்தியாவுடன் இணக்கமாகவே செயற்படுகிறோம். எமது ஆளும்தரப்புக்கான உத்தியோகபூர்வ அழைப்பை இந்தியாவே முதலாவதாக விடுத்தது. இந்தியப் பயணம் பல்துறைகளில் சாதகமாக அமைந்துள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் ஏப்ரல் மாதம் இலங்கைக்கு அரசமுறைப் பயணமாக வருகைதரவுள்ளார். இதன்போது இரு நாடுகளுக்கும் இடையில் புதிதாக பல ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படும்.

சம்பூர் சூரிய மின்சக்தித் திட்டத்தை இந்தியபிரதமர் திறந்து வைக்கவுள்ளார். அத்துடன் மஹவ - - அனுராதபுரம் தொடருந்து பாதையையும் இந்திய பிரதமர் திறந்து வைப்பார். மஹவ - - அனுராதபுரம் தொடருந்துப் பாதை அபிவிருத்தி திட்டத்தை இந்தியா தொடக்கத்தில் கடனாகவே வழங்கியது. ஜனாதிபதியின் இந்தியப் பயணத்தின் பின்னர் இந்த திட்டம் நன்கொடையாக மாற்றியமைக்கப்பட்டது - என்றார்.

## போர்க்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டமைப்பின் ஊடாக விசேட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

உள்ளக பொறிமுறையின் ஊடாகவே அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காண்போம் என்பதை ஐக்கிய நாடுகள் சபைக்கும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கும் பொறுப்புடன் குறிப்பிட்டுள்ளோம். மனித உரிமைகள் பேரவையில் கடந்த காலங்களில் தோற்றம் பெற்ற சவால்களுக்கு தேசிய கட்டமைப்பின் ஊடாக தீர்வு காணப்படும் என்பதை நாட்டு மக்களுக்கு குறிப்பிட்டுக் கொள்கிறோம்.

சுற்றுலாத்துறை சேவை கைத்தொழிலை மேம்படுத்துவதற்கு விசேட திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. சுற்றுலா கைத்தொழில் ஊடாக இந்த ஆண்டு 3 பில்லியன் டொலர் வருவாயை பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ளது. சுற்றுலாத்துறை தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஊடாக விசேட பட்டபடிப்பினை அறிமுகப்படுத்துமாறு வலியுறுத்தியுள்ளோம் என்றார்.

## தேசபந்துவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தன என்று தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் பதில் பொலிஸ் மா அதிபரைக் கைது செய்யுமாறு மாத்தறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்த போதிலும், குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் இதுவரையில் முன்னாள் அவரைக்கைது செய்ய முடியவில்லை. அவர் எங்கிருக்கிறார் என்பது அதிகாரிகளுக்குத் தெரியவில்லை.

இதை அடுத்து தேசபந்துவின் வீட்டை தொடர்ந்து கண்காணிப்புக்கு உட்படுத்தி வந்த அதிகாரிகள் வியாழக்கிழமை தேசபந்துவின் மகன் மற்றும் மனைவியிடம் விசாரணை நடத்தினர் என்று குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# அம்பாறை மாவட்டத்தில் பெரும்போக வேளாண்மை அறுவடை முன்னெடுப்பு

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டத்தில் பெரும்போக வேளாண்மை அறுவடைப் பணிகள் மீண்டும் நேற்று (சனிக்கிழமை) ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அண்மையில்பெய்ததிடீர்மழைவீழ்ச்சிகாரணமாக ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட பெரும்போக வேளாண்மை அறுவடை தடைப்பட்டிருந்தது. எனினும் தற்போது காலநிலை சீரமைந்துள்ளதன் காரணமாக மீண்டும் பொத்துவில் ,அக்கரைப்பற்று ,சம்மாந்துறை, நிந்தவூர், அம்பாறை ,இறக்காமம் ,மத்திய முகாம் ஆகிய இடங்களில் பயிரிடப்பட்ட வேளாண்மை விவசாயிகளால் நெல் அறுவடை இயந்திரங்கள் மூலமாக அறுவடை செய்யப்பட்டு வருகின்றது.

நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் ,விளைச்சல் கடந்த போகங்களை விட திடீர் மழை வீழ்ச்சி காரணமாக குறைவடைந்த போதிலும் நெல்லுக்கான கேள்வி அதி உச்சத்தில் காணப்படுகின்றது. இது தவிர தாம் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் கடன் பட்டு வேளாண்மை செய்கை மேற்கொண்ட போதிலும் தமது வேளாண்மை மழையால் பாதிக்கப்படுவதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

அத்துடன் அறுவடை செய்யப்படும் நெல்லினை கொள்வனவு செய்வதில் அம்பாறைமாவட்டத்தைச் சேர்ந்த அரிசி ஆலை உரிமையாளர்களை விட வெளி மாவட்டங்களைச்சேர்ந்த வியாபாரிகளும்,அரிசி ஆலை உரிமையாளர்களுமே அதிகளவில் நெல்லினை விவசாயிகளிடமிருந்து நேரடியாக கொள்வனவு செய்து வருகின்றனர்.



இந்தப் பேரும் போக வேளாண்மைச் செய்கை காலநிலை மாற்றம் விலைவாசி காரணமாக எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்கவில்லை என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.



கடந்த சில வாரங்களாக தொடர்ச்சியான மழை பெய்ததன் காரணமாக அறுவடை இயந்திரங்கள் வயல் நிலங்களில் மழை நீர் தேங்கி நிற்பதனால் நெல் அறுவடையில் ஈடுபடுவது சிரமமாக உள்ளதாக தெரிவிக்கப்படகின்றது. வேளாண்மை அறுவடை இடம்பெறும் நேரத்தில் கடும் மழை ஏற்பட்டதால் தமது வேளாண்மை நீரில் மூழ்கிக் காணப்படுவதால் அறுவடை செய்ய முடியாது உள்ளதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

ஏனைய போகங்களைவிட இப்பெரும்போகத்தில் விளைச்சல்குறைவடைந்துள்ளதால்பாரியநஷ்டத்தினை எதிர்நோக்கியுள்ளதாகவும் அடுத்த சிறுபோகத்தில் மீண்டும் எவ்வாறு நெற்செய்கையில் ஈடுபடுவது என்பது பற்றி பிரதேச விவசாயிகள் பெரும் கவலை தெரிவித்தனர்.

இது தவிர அண்மையில் பெய்த மழை மற்றும் காட்டு யானைகளின் வரவினால் ஆயிரக்கணக்கான ஏக்கர் வேளாண்மையை அறுவடை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.



## வனவிலங்கு மதிப்பிடு நேற்று தொடங்கியது

விவசாய பயிர்களுக்கு சேதம் விளைவிக்கும் வன உயிரினங்கள் பற்றிய கணக்கெடுப்பு நேற்று (சனிக்கிழமை) இடம் பெற்றது.

இதன் போது தம்பலகாமம் பிரதேச செயலக பிரிவில் உள்ள கோயிலடி கிராம சேவகர் பிரிவிலும் இது முன்னெடுக்கப்பட்டது.

விவசாய அமைச்சு ஊடாக குறித்த நடவக்கையானது தேசிய ரீதியில் நேற்று காலை 08.00 மணி தொடக்கம் 08.05 வரை இடம்பெற்றது. இதன் போது வழங்கப்பட்ட குறித்த படிவம் பூரணப்படுத்தப்பட்டு உரிய உத்தியோகத்தரிகளிடத்தில் கையளிக்கப்பட்டது.





## சம்மாந்துறை பொதுமக்கள் முறைப்பாடு கொடுத்ததில் பழக்கடைகளுக்கு ரூபா 50,000 தண்டப் பணம் விதிப்பு

(நூருல் ஹுதா உமர்)

மனிதப்பாவனைக்குதவாத சுகாதாரமற்ற பழுதடைந்த பழங்களை விற்பனை செய்பவர்களுக்கெதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டு 5 விற்பனை நிலையங்களுக்கு ரூபா 50,000 தண்டப்பணம் செலுத்த உத்தரவிடப்பட்டது.

பழுதடைந்த பழ விற்பனை தொடர்பாகவாடிக்கையாளரொருவர் வெள்ளிக்கிழமை மேற்கொண்ட முறைப்பாட்டையடுத்துசம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட புறநகர்ப்பகுதிகள் மற்றும் அடையாளம் காணப்பட்ட சில பழ விற்பனை நிலையங்கள் யாவும் திடீர் பரிசோதனை செய்யப்பட்டன.



இதன் போது பழுதடைந்த பழங்களை விற்பனை செய்த கடை அடையாளங்காணப்பட்டு பரிசோதனை செய்த போது பல பழுதடைந்த பழங்கள் மீட்கப்பட்டன.

கடந்த வியாழக்கிழமை அன்று கைப்பற்றப்பட்டமனிதப்பாவணைக்குதவாத சில கைப்பற்றப்பட்ட பொருள்களையும் சேர்த்து நேற்று சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றில் சட்டநடவடிக்கைக்காக சமர்ப்பித்த வேளை 5 விற்பனை நிலையங்களுக்கு தலா ரூபா 20,000, இரு கடைகளுக்கு ரூபா 10,000, இரு கடைகளுக்கு ரூபா 5,000 என மொத்தமாக ரூபா 50,000 தண்டப்பணம் செலுத்த உத்தரவிடப்பட்டது.

அத்துடன், பொதுமக்கள் தங்கள் உணவுப் பொருள்களைக் கொள்வனவு செய்யும் போது விழிப்பாக இருக்குமாறு சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## உணரப்படவேண்டிய உண்மை

அனுராதபுரம் வைத்தியசாலையில் பெண் மருத்துவர் ஒருவர் கடமை நேரத்தில் பாலியல் வன்கொடுமைக்குள் உள்ளாக்கப்பட்டமை குறித்த பரபரப்பில் இலங்கை உள்ளது. அரச படையின் முன்னாள் சிப்பாய் ஒருவரே இந்தக் குற்றத்தைப் புரிந்தவர் என்று குற்றஞ்சாட்டி காவல்துறையினர் அவரைக் கைது செய்துள்ளனர். இது இலங்கையில் பாலியல் வன்கொடுமைகள் குறித்ததும் கடந்த காலங்களில் அரச படையினரால் மேற்கொள்ளப்பட்ட இதுபோன்ற குற்றங்கள் குறித்துமான விவாதங்களையும் இது கிளப்பியுள்ளது.

அண்மைக்காலங்களில் இடம்பெற்ற கொலைகள் பலவற்றின் பின்னாலும் இலங்கை அரச படையினரின் முன்னாள் உறுப்பினர்களே இருந்தனர் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. இலங்கையின் பெரும் கவனத்தை ஈர்த்த, நீதிமன்றத்திற்குள் புகுந்து குற்றவாளிக் கூண்டில் நின்ற சந்தேகநபரான கணேமுல்ல சஞ்சீவவைக் கொன்ற வழக்கிலும் குற்றஞ்சாட்டப்பட்டிருப்பவர் இலங்கையின் முன்னாள் படையினர் ஒருவரே.

படுகொலைகளைச் செய்யும் கூலிப் படையினராக முன்னாள் அரச படையினர் மட்டுமல்ல கடமையில் இருக்கும் படையினரும்கூடச் செயற்பட்டு வருகின்றார்கள் என்பதை அரச தலைவர் அநுரகுமாரவே தெரிவித்திருந்தார். கூலிக்குக் கொலைகளைச் செய்துவிட்டு அவர்கள் படை முகாம்களுக்குள் சென்று பதுங்கிவிடுகின்றார்கள் என்று அவர் தெரிவித்திருந்தார்.

மற்றொருபுறத்தில் காவல்துறையைச் சேர்ந்த ஒருவரைக் கொன்ற குற்றச்சாட்டில் முன்னாள் பதில் காவல் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தேடப்பட்டு வருகின்றார். லஞ்சம் மற்றும் போதைப் பொருள் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடையவர்களாக காவலர்கள் பலர் தொடர்ந்து கைது செய்யப்பட்டு வருகின்றார்கள்.

இவையெல்லாம் இலங்கை அரச படையினர் எவ்வளவு தூரம் குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டிருக்கின்றார்கள் என்பதற்கான உதாரணம். இவையனைத்தும் அரச படையினரை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட முறையான மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட விசாரணைகளின் மூலம் வெளிவந்த தகவல்கள் அல்ல. சமூகக் குற்ற விசாரணைகளின் போது தற்செயலாக வெளிப்பட்ட தகவல்களே இவையெல்லாம். முறையான விசாரணை இடம்பெற்றால் இன்னும் தெளிவான மேலதிக தகவல்கள் கிடைக்கும். ஆனால், அத்தகைய விசாரணை ஒன்றை நடத்தும் துணிபு எந்தவொரு ஆளும் தரப்புக்களுக்கும் இல்லை என்பதே துயரம்.

அரச படையினரை கதநாயகர்களாக மக்கள் முன் நிறுத்தி, அவர்களின் உயிர்களைக் காவு கொடுத்து அரசியல் செய்தவர்களான ஆட்சியாளர்கள் இத்தகைய நேர்மையான, முறையான விசாரணைகளைச் செய்வார்கள் என்று எதிர்பார்ப்பது அபத்தம் என்பது வெளிப்படையானது. இதைவிட அபத்தமானது இந்தக் குற்றங்களை படைகளில் உள்ளவர்களின் தனிமனித் தவறு என்றும் அது நிறுவனமயப்படுத்தப்பட்டது அல்லவென்றும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச போன்றவர்கள் நியாயப்படுத்த முயல்வதுதான்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், அரச படையினரால் பாலியல்வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட தமிழ்ப்பெண்களுக்கு நீதி இல்லையா என்று கேள்வி எழுப்பியபோது பொங்கிய நாமல், அத்தகைய சம்பவங்கள் இடம்பெற்றிருந்தால் அது தனிமனிதத் தவறுகள் என்றவாறு விளக்கமளித்திருந்தார். அதே நாமல்தான் அல் ஜசீரா தொலைக்காட்சியில் ரணில் விக்கிரமசிங்க நாட்டைக் காட்டிக்கொடுக்கவில்லை என்று பாராட்டுகிறார். படையினரின் குற்றங்கள் தனி மனிதத் தவறுகள் என்றால் தாம் காட்டிக்கொடுக்கப்படலாம் என்று ராஜபக்சக்கள் பதறுவதற்குத் தேவை எதுவும் இருக்கமுடியாது. அங்கே தனி மனிதத் தவறுகளைவிட நிறுவனமயப்பட்ட குற்றங்கள் நிகழ்த்தப்பட்டன என்பதுதான் உண்மை. அது உலகம் அறிந்த உண்மை.

இந்த நிறுவனமயப்படுத்தப்பட்ட குற்றங்களில் இருந்து படையினரை காப்பாற்றுவதற்கும் தண்டனை விலக்களிப்பு வழங்குவதற்கும் ஆட்சியாளர்கள் பாதுகாப்பரணாக நடந்து கொண்டமையே இன்று அதுவொரு சமூகச் சீரழிவாக மாறி இருப்பதற்கான காரணம். இந்த உண்மையை உணரமுடியாத எந்தவொரு ஆளும்தரப்பாலும் இந்தப் பிரச்சினைக்குச் சரியான தீர்வைக் காணமுடியாது.



# மீண்டும் ஒரு மொழிப் போர்

**முரான்**

இந்தியாவின் மொழிப் பன்முகத்தன்மை அதன் சிறப்பு அம்சங்களில் ஒன்று, இந்திய அரசமைப்பு 22 மொழிகளையும் நூற்றுக்கணக்கான பிராந்திய பேச்சுவழக்குகளையும் அங்கீகரித்துள்ளது. இருப்பினும், பெரும்பான்மையானவர்கள் பேசும் இந்தி மொழியை ஊக்குவிப்பதற்கும் பிராந்திய மொழிகளை, குறிப்பாக தமிழைப் பாதுகாப்பதற்கும் இடையிலான நீண்டகால விவாதம் அரசியல் மற்றும் சமூகப் பதற்றங்களைத் தொடர்ந்து தூண்டிவிடுகிறது. தமிழ்நாட்டில் ஏற்கனவே மொழிப் போர் ஒரு இந்தி எதிர்ப்புப் போராட்டமாக வெடித்துக் கிளம்பியிருந்த நிலையில் தற்போது இரு மொழிகளுக்கும் இடையிலான பதற்றம் மீண்டும் உச்சம் பெற்றுள்ளது.

இந்தியப் பாடசாலைகளில் மும்மொழிக் கொள்கை (பிராந்திய மொழி, இந்தி மற்றும் ஆங்கிலம்) கடைப்பிடிக்கப்படவேண்டும் என்று மத்திய அரசின் குழு பரிந்துரைத்தது. போட்டி உலகத்தை சிறப்பாக எதிர்கொள்ள மாணவர்களைத் தயார்படுத்த பாடசாலைகளில் பன்மொழி கற்பித்தல் முக்கியம் என்றது இந்தப் பரிந்துரை.

அண்மையில் இது தொடர்பான சட்ட வரைவு வெளியிடப்பட்டபோது, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் கடும் எதிர்ப்பு தெரிவித்து, கருத்து மற்றும் ஆலோசனைக்காக வெளியிடப்பட்ட இந்தவரைவில் குறிப்பிடப்பட்டிருப்பதுபோல இந்தி திணிக்கப்பட்டால் மத்திய அரசு கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று எச்சரித்து அறிக்கைகளை வெளியிட்டன. மேற்கு வங்கம், கர்நாடகா மற்றும் பஞ்சாபிலிருந்தும் எதிர்ப்புகள் வந்தன. இதனை அடுத்து அந்த வரைபை நெகிழ்வுத் தன்மை கொண்டதாகத் திருத்தியது மத்திய அரசு.

மத்திய அரசின் பரிந்துரை அறிக்கையின் முதல் பதிப்பில், சில குழப்பங்களுக்கு வழிவகுத்த ஒரு பந்தி இருந்தது, இது இந்தி பேசாத மாநிலங்களில் இந்தி கற்றலைத் திணிப்பதாக விளக்கப்பட்டது. இந்தக் குழப்பத்தைத் தீர்க்க, ஆளும்தரப்புத் திருத்துப்பட்ட பதிப்பை வெளியிட்டுள்ளது,

### வரலாற்றுப் பின்னணி

இந்தி--தமிழ் மொழி மோதல் சுதந்திரத்திற்கு முந்தைய சகாப்தத்திலிருந்தே தொடங்குகிறது. 1930களின் பிற்பகுதியில், பாடசாலைகளில் இந்தி கட்டாயமாகக் கற்பிக்கப்படுவதற்கு எதிராக சென்னை மாகாணம் வலுவான எதிர்ப்பைக் காட்டியது, இது திராவிட இயக்கத்தின் தலைமையில் பரவலான போராட்டங்களுக்கு வழிவகுத்தது. பெரியார் ஈ.வி. ராமசாமி இந்தித் திணிப்பை திராவிட அடையாளத்தை அழிக்கும் முயற்சியாகக் கருதினார்.

மற்ற மாநிலங்களைப் போலல்லாமல், மாநிலப் பாடசாலைகளில் இந்தி மொழியைக் கட்டாயமாக்குவதற்கான நடவடிக்கைகளை எதிர்க்கும் நீண்ட வரலாற்றை தமிழ்நாடு கொண்டுள்ளது.

1937 முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டம்

1937ஆம் ஆண்டு, அப்போதைய சென்னை மாகாணத்தின் (கேரளா, கர்நாடகா மற்றும் ஆந்திராவின் சில பகுதிகளை உள்ளடக்கிய) பிரதமராக இருந்த ராஜகோபாலாச்சாரி, 125 பள்ளிகளில் 6, 7 மற்றும் 8 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு இந்தி கற்பதை ஒரு முன்னோடித் திட்டமாக அறிமுகப்படுத்தியபோது, இதுபோன்ற முதல் போராட்டம் தொடங்கப்பட்டது.

தமிழ் பேசும் பகுதிகளில் இந்த நடவடிக்கை கடுமையாக எதிர்க்கப்பட்டது, அங்கு பெண்கள், குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் உட்பட பொது மக்கள் இந்த நடவடிக்கைக்கு எதிராக தங்கள் கவலையை வெளிப்படுத்தித் தெருக்களில் இறங்கிப் போராட்டம் நடத்தினர். இதனால் கைது செய்யப்பட்டனர். தாளமுத்து மற்றும் நடராசன் ஆகிய இருவர் போராட்டத்தில் கொல்லப்பட்டனர். இரண்டு வருடங்கள் தொடர்ந்த போராட்டத்தை சமாளிக்க அப்போதைய தமிழ்நாடு முதல்வர் ராஜாஜி போராடினார்.

தமிழர்கள் இந்தி கற்க ஏன் இவ்வளவு எதிர்ப்பு தெரிவிக்கின்றனர்? மற்ற இந்திய மொழிகள் ஏதோ ஒரு வகையில் சமஸ்கிருத மொழியுடன் தொடர்புடையதாக இருக்கும்போது, தமிழ் மொழி தனியான இலக்கயம் மற்றும் இலக்கியம் என்று சமஸ்கிருதத்திலிருந்து விலகி ஒரு வளமான பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது.

தமிழ் அறிஞர்கள் மற்றும் சைவர்கள் அனைவரும் இந்தியை சமஸ்கிருதத்தின் ஒரு பகுதியாகவே கருதினர். எனவே, பெரியார் ஈ.வி.ராமசாமி நாயக்கர், மறைமலை அடிகள், திரு.வி.க., சோமசுந்தர பாரதியார், கே.ஏ.பி.விஸ்வநாதம் மற்றும் பாரதிதாசன் போன்ற முக்கியஸ்தர்கள் தீவிர இந்தி எதிர்ப்புப் போராட்டங்களுக்குத் தலைமை தாங்கினர்.

தமிழக முன்னாள் முதல்வரான கருணாநிதி, 1938ஆம் ஆண்டு, தனது 14 வயதில், சிறுவர்கள் குழுவைக்கூட்டி, திருவாரூர் வீதிகளில் இறங்கி இந்தி திணிப்புக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினார். மத்திய அரசு இந்தி திணிக்கத் திட்டமிட்ட போதெல்லாம், அந்த நடவடிக்கையை எதிர்த்த முதல் குரல் கருணாநிதியுடையது. இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை உச்சத்தில் அவர் முன்னின்று நடத்தினார். ஆட்சிக்கு வந்த பிறகும், மத்திய அரசின் அழுத்தத்திற்கு அவர் அடிபணியவில்லை, இந்தப் பிரச்சினையில் கடுமையாக இருந்தார். அண்ணாவுக்குப் பிறகு, இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் உணர்வை உயிர்ப்புடன் வைத்திருந்தவர் கருணாநிதிதான், அது அவருக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த எம்ஜிஆரையும் ஜெயலலிதாவையும் அதைப் பின்பற்ற கட்டாயப்படுத்தியது.

### இரண்டாவது இந்திப் போராட்டம்

சுதந்திரத்திற்குப் பிறகு, மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு, வல்லபாய் படேல், ராஜாஜி மற்றும் பி.ஆர். அம்பேத்கர் உள்ளிட்ட பெரும்பாலான தேசியத் தலைவர்கள் ஆங்கிலத்தைக் கைவிட்டு, இந்தியர்களை ஒன்றிணைக்கும் நிலத்தின் மொழியான இந்தியை அதிகாரப்பூர்வ மொழியாக

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர்
Kalaikkathir

# மீண்டும் ஒரு...

4ம் பக்கத் தொடர்ச்சி...........

மாற்ற ஒருமனதாக விரும்பினர்.

இந்திய அரசமைப்பின் முதன்மை சிற்பியான அம்பேத்கர், இந்தி தேசிய மொழியாக இருக்க வேண்டும் என்று பரிந்துரைத்தார், மேலும் மொழி அடிப்படையில் மாநிலங்களை மறுசீரமைக்கும் யோசனையை விரும்பவில்லை, ஏனெனில் எதிர்காலத்தில் அரசியல் கட்சிகள் ஆங்கிலத்தை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகள் இருப்பதாக அவர் அஞ்சினார். ஆனால் ராஜாஜி மற்றும் டி.டி.கிருஷ்ணமாச்சாரி ஆங்கிலத்தை முற்றிலுமாக நிராகரித்து இந்தியை மட்டுமே அதிகாரப்பூர்வ மொழியாக மாற்றும் யோசனையை ஏற்கவில்லை. இதைத் தொடர்ந்து, இந்த விஷயம் முன்ஷி ஐயங்கார் தலைமையிலான குழுவிடம் பாரப்படுத்தப்பட்டது, அவர்கள் ஆங்கிலத்தை கூட்டு அதிகாரப்பூர்வ மொழியாக இருக்க அனுமதிக்க 15 ஆண்டுகள் அவகாசம் அளித்தனர், பின்னர் இந்தி பேசாத மாநிலங்கள் இந்தியில் தேர்ச்சி பெற இந்தியை அதிகாரப்பூர்வ மொழியாக மாற்றினர்.

## மூன்றாவது இந்தி எதிர்ப்புப் போராட்டம்

1963ஆம் ஆண்டில், அப்போது மாநிலங்களவை உறுப்பினராக இருந்த அண்ணாதுரை, இந்தி பேசாத மாநிலங்களில் இந்தியை அதிகாரப்பூர்வ மொழியாகத் திணிக்கவேண்டாம் என்றும், ஆங்கிலத்தைத் தொடர அனுமதிக்கவேண்டும் என்றும் பிரதமர் நேருவிடம் கோரிக்கை விடுத்தார். வட இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதைக் கடுமையாக எதிர்த்தனர். 15 ஆண்டுகள் என்பது மிக நீண்ட காலம் என்றும், இந்தியை அதிகாரப்பூர்வ மொழியாக்க வேண்டிய நேரம் இது என்றும் அவர்கள் கூறினர்.

இதற்கு பதிலளித்த கிருஷ்ணமாச்சாரி, 'நீங்கள் ஒன்றுபட்ட இந்தியாவை விரும்புகிறீர்களா அல்லது இந்தி பேசும் இந்தியாவை மட்டும் விரும்புகிறீர்களா?' என்று கேட்டார். இந்த போராட்டத்தைத் தொடர்ந்து, காங்கிரஸ் அமைச்சர்கள் சுப்பிரமணியம் மற்றும் ஓவி. அழகேசன் ஆகியோர் இந்தியை அரசு மொழியாக மாற்றும் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தங்கள் ராஜினாமாவை சமர்ப்பித்தனர்.

அப்போதைய அகில இந்திய காங்கிரஸ் தலைவர் காமராஜ், மேற்கு வங்க காங்கிரஸ் தலைவர் அதுல்ய கோஷ், அப்போதைய முதலமைச்சர்கள், நிஜலிங்கப்பா (கர்நாடகா) மற்றும் நீலம் சஞ்சீவ ரெட்டி (ஆந்திரப் பிரதேசம்) ஆகியோரும் இந்த நடவடிக்கை இந்தி பேசாத மக்களின் பிரிவினைவாதத்தையும் பாகுபாட்டையும் ஊக்குவிக்கும் என்று கருத்துத் தெரிவித்தனர்.

## நேருவின் உறுதிமொழி

இந்தி பேசாத மாநிலங்கள் எடுத்த கடுமையான நிலைப்பாட்டைத் தொடர்ந்து, அப்போதைய பிரதமர் ஜவஹர்லால் நேரு நாடாளுமன்றத்தில் இந்தி பேசாத மாநிலங்கள் இந்தியை அரசு மொழியாக ஏற்றுக்கொள்ளும் வரை ஆங்கிலம் தொடரலாம் என்றும், அதுவரை இந்தி அவர்கள் மீது ஒருபோதும் திணிக்கப்படாது என்றும் உறுதியளித்தார். ஆனால் அண்ணா இதற்கும் உடன்படவில்லை, ஆங்கிலத்தில் 'மே' என்ற வார்த்தையை நீக்க வேண்டும் என்றும், அதற்கு பதிலாக 'வேண்டும்' என்ற வார்த்தையை நாடாளுமன்றத்தில் நேருவின் உறுதிமொழியில் பயன்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

அண்ணாவுக்கும் நேருவுக்கும் இடையே பல சூற்று வாதங்கள் எழுந்த போதிலும், 'ஆங்கிலம் ஒரு அரசு மொழியாகத் தொடரவேண்டும்...' என்று உறுதிமொழி மாற்றப்பட வேண்டும் என்பதை நேரு ஏற்கவில்லை. 'இருக்கலாம்' மற்றும் 'செய்யவேண்டும்' என்ற வார்த்தைகளுக்கு இடையே பெரிய வித்தியாசம் இல்லை என்பது நேருவின் வாதம், அதைப் பற்றி கவலைப்படவேண்டாம் என்று அண்ணாவிடம் கூறினார். தமிழ்நாடு மற்றும் இந்தி பேசாத பிற மாநிலங்கள் மீது இந்தி ஒருபோதும் திணிக்கப்படாது என்பது அவரது உறுதிமொழியாகும்.

இந்தி மட்டுமே அரச மொழியாக்கப்படுவது குறித்த தனது கருத்துக்களை மாற்றிய மாநில காங்கிரஸ் தலைவரான ராஜாஜி, 1958 முதல் நேருவுக்கு பல கடிதங்கள் எழுதி, 1964 ஆம் ஆண்டு வரைகூட இந்தியைத் திணிக்க வேண்டாம் என்று நேருவிடம் கோரிக்கை விடுத்தார். 'இந்தியை ஒருபோதும் திணிக்க வேண்டாம், ஆங்கிலம் என்றென்றும் அரச மொழியாக இருக்கவேண்டும்' என்று ராஜாஜி கூறினார்.

சிறிது காலத்திலேயே, நேரு இறந்தார், தமிழக மக்கள் டெல்லியில் வேறு எந்தத் தலைவரையும் நம்பாததால் நிலைமை வெகுவாக மாறியது. அதனுடன், இந்தி பேசாதவர்களுக்கு நாட்டில் இடமில்லை என்று வடக்கில் உள்ள தலைவர்கள் அறிக்கைகளை வெளியிட்டனர். மேலும், டெல்லியில், அனைத்து பெயர் பலகைகளும் இந்தியில் மட்டுமே இருந்தன, மேலும் அனைத்து ஆங்கில பெயர் பலகைகளும் அகற்றப்பட்டன. இது தமிழர்களிடையே மேலும் கோபத்தை ஏற்படுத்தியது, 1965ஆம் ஆண்டில், இந்தி எதிர்ப்புப் போராட்டம் வலுவாக மீண்டும் எழுச்சி பெற்று பரவலான கலவரங்களைத் தூண்டியது.

குடியரசு தினத்தன்று தமிழ் ஆர்வலர்கள் கருப்புக் கொடிகளை ஏற்றி, ஜனவரி 26ஆம் திகதியை கறுப்பு நாளாக அறிவித்தனர். வட இந்தியாவில், ஆங்கிலத்தை நீக்கக் கோரி போராட்டங்கள் வேகம் பெற்றன. 'இந்தி தெரியாதவர்களுக்கு இந்தியாவில் இடமில்லை' என்று அவர்கள் கூறினர்.

தமிழ்நாட்டில், இந்தி எதிர்ப்பு இயக்கம் வலுவாக வேரூன்றியது, போராட்டக்காரர்கள் பெயர் பலகைகளில் இருந்த இந்தி எழுத்துக்களை அழித்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் தனது மாணவர் படையை நிறுத்தியதால் பரவலான கலவரங்கள் நடந்தன. அப்போதைய முதல்வர் பக்தவத்சலம் போராட்டக்காரர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்தார், இந்திக்கு எதிராகப் போராடியவர்கள் மீது போலீஸ் துப்பாக்கிச் சூடு நடத்த உத்தரவிட்டார். போலீஸ் துப்பாக்கிச் சூட்டில் பலர் உயிரிழந்தனர்.

போராட்டத்தில் பலர் தீக்குளித்து ஆகுதியாக்கினர். மாணவர்களுக்கு ஆதரவாகப் போராட்டத்தில் இணைந்த பல உயர் அரசியல் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்ற முக்கியத் தலைவர்களில் கருணாநிதி, குன்றக்குடி மடத்தைச் சேர்ந்த குன்றக்குடி அடிகளார், பின்னர் அண்ணா தலைமையிலான திமுகவின் முதல் ஆளும்தரப்பில் தமிழ்நாடு சட்டமன்ற சபாநாயகராகப் பதவி வகித்த ஆதித்தனார், முன்னணி தமிழ் அறிஞர்களான விஸ்வநாதம், நெடுஞ்செழியன் மற்றும் பேராசிரியர் லகுவானார் ஆகியோர் அடங்குவர்.

இந்தப் போராட்டம் 1967 ஆம் ஆண்டு காங்கிரஸை தோற்கடித்து திமுக ஆட்சிக்கு வர வழி வகுத்தது. அதுமுதல் இன்றும்கூட, காங்கிரஸ் தமிழ்நாட்டில் ஆட்சிக்கு வர போராடி வருகிறது, அந்த உணர்வின் தாக்கம் அப்படிப்பட்டது.

இதில் கவனிக்க வேண்டிய ஒரு முக்கியமான விஷயம் என்னவென்றால், பெரியார் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் மூன்றாம் கட்டத்தை அங்கீகரிக்கவில்லை, போராட்டக்காரர்கள் அரசியல் ரீதியான நோக்கம் கொண்டவர்கள் என்றுகூட விமர்சித்தார். ஆனால் இந்தி ஆதரவாளராக இருந்த ராஜாஜி தனது கருத்துக்களை மாற்றி, இந்தி திணிப்பை எதிர்த்துத் திரும்பி, திமுகவின் போராட்டத்தை ஆதரித்தார்.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் விளைவுகள்

அண்ணா ஆட்சிக்கு வந்த பிறகும், இந்தி எதிர்ப்புப் போராட்டம் தொடர்ந்தது. பள்ளிகளில் விருப்பப் பாடமாக இருந்த இந்தி, அண்ணா தலைமையிலான திமுக அரசால் நீக்கப்பட்டது. அதேபோல், தேசிய மாணவர் படை (என்சிசி) பயிற்சியில் இந்தி தொடர்பு மொழியாக இருந்ததால், அரசுப் பாடசாலைகளில் இருந்து நீக்கப்பட்டது. தமிழ்நாடு தேசிய நீரோட்டத்திலிருந்து மெதுவாக விலகிச் செல்வதுபோல் தோன்றியது. ஆனால் அறிஞர் அண்ணா இந்த முடிவை எடுப்பதைத் தவிர வேறு வழியில்லை என்றார். 1968ஆம் ஆண்டில், அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி, 1964இல் நேரு செய்தது போலவே, இருமொழிக் கொள்கையை அமல்படுத்துவதற்கான மத்திய அரசின் உறுதியை மீண்டும் வலியுறுத்தினார். இந்தி எதிர்ப்புப் போராட்டம் காரணமாக 1980 களில் தமிழ்நாட்டில் நவோதயா பள்ளிகள் செயல்பட முடியவில்லை. அவர்கள் இந்தியை வெற்றிகரமாகத் தடுத்தனர், ஆனால் ஆங்கிலம் கற்க ஆர்வம் அதிகரித்தது.

இந்தி திணிப்பை எதிர்ப்பதில் தமிழ்நாடு முன்னணியில் இருந்தது. மகாராஷ்டிராவில், ஒரு மொழியாக இந்தி பரவலாக இருந்தது, ஒரு மொழியாக மராத்தி பின்தங்கியிருந்தது. ஆனால் சிவசேனாவின் பால் தாக்கரே மராத்தி மொழியைக் கையில் எடுத்துக்கொண்டு மராத்தி மனோஸ் பிரச்சினையை முன்னுக்குக் கொண்டு வந்து மராத்தியர்களுக்கு வேலைகளில் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று கோரினார். இப்போது, ராஜ் தாக்கரேவும் உத்தவ் தாக்கரேவும் மகாராஷ்டிராவில் 'மராத்தி மட்டும்' என்று போராடுகிறார்கள்.

தமிழ்நாட்டில், மத்திய அரசு அலுவலகங்கள்கூட, குடிமகன் விரும்பினால், தமிழில் பதில் அளிக்க வேண்டும்.

கடந்த 50 ஆண்டுகளாக இந்தி எதிர்ப்புப் போராட்டம் அதிகம் பேசப்படும் தலைப்பாக இருந்தாலும், தனியார் பள்ளிகளில் மாணவர்கள் இந்தி கற்பதை அது தடுக்கவில்லை. இந்தி பிரச்சார சபை நடத்தும் இந்தித் தேர்வுகளில் லட்சக்கணக்கான மாணவர்கள் கலந்து கொள்கிறார்கள். இருப்பினும், இந்தி எதிர்ப்பு உணர்வு திராவிட அரசியல்வாதிகளிடம் இன்னும் வலுவாக உள்ளது.

## மீண்டும் கிளறப்பட்ட மொழி உரிமை

சமீபத்திய ஆண்டுகளில், குறிப்பாக தேசிய கல்விக் கொள்கை (ஹிசிஊண) மற்றும் முன்மொழியப்பட்ட நாடாளுமன்ற தொகுதி மறுவரையறை ஆகியன மொழி உரிமைக் குரல்களை மீண்டும் கிளர்ந்தெழச் செய்துள்ளன. மொழி விவாதம் மீண்டும் எழுந்துள்ளது. மக்கள்தொகை வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட தொகுதி மறுவடிவமைப்பு வட மாநிலங்களுக்கு சாதகமாக இருக்கும், ஆனால் கல்வி அறிவில் அதிகம் முன்னேறிய தென் மாநிலங்களுக்குச் சாதமானதாக இருக்காது என்று தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் கவலை தெரிவித்துள்ளார். 'மக்கள்தொகை கட்டுப்பாட்டில் தமிழ்நாட்டின் வெற்றியை அதன் அரசியல் பிரதிநிதித்துவத்தைக் குறைப்பதற்கான ஒரு சாக்காகப் இந்தத் தொகுதி மறுசீரமைப்புப் பயன்படுத்தக்கூடாது' என்று ஸ்டாலின் கூறினார்.

இதனால் இந்தி உட்பட ஆளும்தரப்பின் மும் மொழிக் கொள்கை தமிழ்நாட்டில் எதிர்ப்பைச் சந்தித்துள்ளது. இரு மொழிக் கொள்கைக்கு (தமிழ் மற்றும் ஆங்கிலம்) தனது மாநிலத்தின் உறுதிப்பாட்டை ஸ்டாலின் மீண்டும் வலியுறுத்தினார், மேலும் மத்திய அரசு மேற்கொள்ளும் "கட்டாய திணிப்பு" குறித்தும் அவர் கடுமையாக எச்சரித்தார். 'நீங்கள் இந்தியைத் திணிக்காவிட்டால் நாங்கள் அதை எதிர்க்க மாட்டோம்' என்று அவர் அறிவித்தார்.

## முரண்படும் கருத்துக்கள்

இந்த விவாதத்தில் அரசியல் தலைவர்கள் மட்டும் தலையிடவில்லை. நடிகரும் -அரசியல்வாதியுமான பவன் கல்யாண் தமிழ்நாட்டின் நிலைப்பாட்டில் உள்ள முரண்பாடு குறித்துக் கேள்வி எழுப்பினார், 'இந்தியை எதிர்க்கிறார்கள், ஆனால் அதில் திரைப்படங்களை டப்பிங் செய்வதன் மூலம் ஏன் லாபம் ஈட்டப் பார்க்கிறார்கள்?' என்று கூறினார். மொழியியல் பன்முகத்தன்மையை கட்டுப்படுத்துவதைவிட அதைத் தழுவுவதன் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார்.

இதற்கிடையில், மொழியியலாளரும் அறிஞருமான கணேஷ் தேவி, இந்தியாவின் வளமான மொழியியல் பாரம்பரியத்தை புறக்கணிப்படுவதற்குக் கண்டம் தெரிவித்தார். 'ஒரு நாட்டின் முன்னேற்றத்தால் அதன் மொழியியல் பன்முகத்தன்மையை இழந்துவிடக்கூடாது. ஒரு தேசிய அடையாளத்தை ஊக்குவிக்கும் அதே வேளையில் பிராந்திய மொழிகளைப் பாதுகாப்பதும் அவசியம்' என்று அவர் கூறினார்.

தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினும் இந்திக்கு எதிராக ஒரு வலுவான நிலைப்பாட்டை எடுத்துள்ளார், இந்திக்கான தொடர்ச்சியான அழுத்தம் மாநிலத்தில் தீவிரமான எதிர்ப்பிற்கு வழிவகுக்கும் என்று எச்சரித்தார். 'வடக்கில் ஏற்கனவே பல மொழிகளை இந்தி அழித்துவிட்டது; தமிழுக்கும் அது நடக்க நாங்கள் அனுமதிக்க மாட்டோம்' என்று அவர் குறிப்பிட்டார்.

## முன்னோக்கிய பாதை

தேசிய ஒற்றுமையை பிராந்திய மொழியியல் பெருமையுடன் சமநிலைப்படுத்தும் சவாலை இந்தியா இப்போது எதிர்கொள்கிறது. பலருக்கு இந்தி ஒரு இணைப்பு மொழியாகச் செயல்படும் அதே வேளையில், இந்தி பேசாத மாநிலங்களில் அதைத் திணிப்பது உள்ளூர் மக்களை அந்நியப்படுத்தும் அபாயம் உள்ளது என்பதை நிபுணர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். மொழியியல் அடையாளம் என்பது பேரம் பேச முடியாதது என்று தமிழ்நாடு அரசு பலமுறை கூறியுள்ளது.

இந்தியாவின் அபிவிருத்தியில் மொழியியல் பன்மைத்துவத்தை மதிப்பது மிக முக்கியமானதாக இருக்கும் என்கின்றன தென் மாநிலங்கள். ஒன்றை அமல்படுத்துவதற்குப் பதிலாக, அனைத்து மொழிகளின் முக்கியத்துவத்தையும் அங்கீகரிப்பது, இந்தியாவின் கலாசார பாரம்பரியத்தைப் பாதுகாக்கும் அதேவேளையில் அதிக ஒற்றுமையை வளர்க்கும் என்பதே பொதுவான கருத்து. விவாதங்கள் தொடர்கின்றன. மத்திய அரசு இந்த விடயத்தில் விடாப்பிடியான நிலையை எடுப்பது பிளவுகளை ஏற்படுத்தும்.

# வவுனியா மாணவனின் இலத்திரனியல் வாக்களிப்பு இயந்திரத்தை பார்வையிட்ட தேர்தல் ஆணைக்குழுவின் மேலதிக ஆணையாளர்

இலங்கையில் முதன்முறையாக இலத்திரனியல் வாக்களிப்பு இயந்திரத்தினூடாக வாக்களிப்பு மேற்கொண்டு வவுனியா மாணவன் சாதனை படைத்துள்ள நிலையில், தேர்தல் ஆணைக்குழுவின் மேலதிக ஆணையாளர் எஸ்.அச்சுதன் அதனை பார்வையிட்டார்.

வவுனியா விபுலானந்தா கல்லூரிக்கு நேற்று (சனிக்கிழமை) வருகை தந்த தேர்தல் ஆணைக்குழுவின் மேலதிக ஆணையாளர் தலைமையிலான குழுவினர் குறித்த மாணவனின் கண்டு பிடிப்பை பார்வையிட்டனர்.

வவுனியா விபுலானந்தா கல்லூரி மாணவன் கபிலாஸால் அண்மையில் புத்தாக்க போட்டிக்காக கண்டுபிடிக்கப்பட்டு, தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்ற இலத்திரனியல் முறையிலான வாக்களிப்பு இயந்திரத்தை பயன்படுத்தி பாடசாலையில் மாணவர் நாடாளுமன்ற தேர்தல் வாக்களிப்பு செயற்பாடு இடம்பெற்றிருந்தது.

மாணவனால் கண்டுபிடிக்கப்பட்ட இந்த இலத்திரனியல் வாக்களிப்பு இயந்திரம் இலங்கையின் முதல் முறையாக ஒரு தேர்தலுக்கு பயன்படுத்தப்பட்டிருந்தமை இதுவே முதல் தடவையாகும்.

இலங்கை தேர்தல் முறையில் கடதாசி பாவனை இல்லாது இலத்திரனியல் வாக்களிப்பு முறையை அறிமுகப்படுத்த வேண்டும் என்கின்ற நோக்கோடு குறித்த மாணவரால் கண்டுபிடிக்கப்பட்ட இந்த பொறிமுறை முதன் முறையாக மாணவர் நாடாளுமன்றத்திற்கு பயன்படுத்தப்பட்டிருக்கின்றது.

இந்நிலையில், குறித்த இலத்திரனியல் வாக்களிப்பு இயந்திரம் தொடர்பாக அறிந்து கொண்ட தேர்தல் ஆணைக்குழுவினர் அதனை பாடசாலைக்கு சென்று பார்வையிட்டதுடன், அதன் செயன்முறை தொடர்பாகவும் அறிந்து





கொண்டுமாணவனுக்குதமதுபாராட்டுக்களையும் தெரிவித்தனர்.

அத்துடன், அதனை மேலும் விருத்தி செய்வது தொடர்பாகவும் ஆலோசனைகளை வழங்கியதுடன், எதிர்காலத்தில் இதனை மேலும் விருத்தி செய்து தேர்தல் நடவடிக்கைகள், தேர்தல் பயிற்சிகளில் பயன்படுத்துவது குறித்தும் தமது ஆணைக்குழுவுடன் பேசி ஆலோசிப்பதாகவும் தெரிவித்திருந்தனர்.

இதன்போது, வவுனியா உதவி தேர்தல் ஆணையாளர் அமல்ராஜ், பாடசாலை பிரதி அதிபர்களான திருமதி சுரேந்திரன், எஸ்.தர்சன், பாடசாலை ஆசிரியர்கள், உயர்தர மாணவர்கள், மாணவனின் பெற்றோர், பழைய மாணவர் சங்கத்தினர் ஆகியோரும் வருகை தந்திருந்தனர். 100






# உள்நாட்டு துப்பாக்கியுடன் ஓமந்தையில் ஒருவர் கைது

வவுனியா - ஓமந்தை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நாயக்குளம் பகுதியில் உள்நாட்டுத் துப்பாக்கியுடன் ஓமந்தை பொலிஸாரால் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

ஓமந்தை பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் 58 வயதுடைய ஓமந்தை நாயக்குளம் பகுதியைச் சேர்ந்தவர் ஆவார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஓமந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கிளிநொச்சி வீதி விபத்தில் ஒருவர் இறப்பு

பளை பொலீஸ் பிரிவுக்கு உட்பட்ட பளைகரந்தாய் பகுதியில் வெள்ளிக்கிழமை நள்ளிரவு11.50 மணியளவில் யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்த பார ஊர்தியும் கிளிநொச்சி பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் ஒன்றுடன் ஒன்று நேரடியாக நேருக்கு நேர் மோதியதன் காரணமாக மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் சம்பவ இடத்திலே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் இச்சம்பவத்தின் தொடர்புடைய பார ஊர்தியின் சாரதி பளை பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் பளை வடக்கு கொடிகாமத்தை சேர்ந்த 23 வயதுடைய மகேந்திரன் நிசாந்தன் என்னும் இளைஞனே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார் உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவுகளிடம் ஒப்படைக்க பளை பொலீஸார் நடவடிக்கை மேற்கொண்டப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக பளை பொலஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். 316







# டிஜிட்டல் மயமாக்கல் - நம்பிக்கை தரும் பாதை

**ஐயை**

இலங்கை கடந்த இரண்டு தசாப்தங்களாக, குறிப்பிடத்தக்க டிஜிட்டல் மாற்றத்திற்கு உட்பட்டுள்ளது. ரணிலின் ஆட்சியின் போதும் சரி இப்போது அநுரவின் ஆட்சியின்போதும் சரி டிஜிட்டல் மயமாக்கல் முக்கிய பேசு பெருளாக இருக்கின்றது. 2000களின் முற்பகுதியில் வரையறுக்கப்பட்ட தொழில்நுட்ப உள்கட்டமைப்பிலிருந்து இன்றைய செழிப்பான டிஜிட்டல் பொருளாதாரம் வரை, நாடு இணைய இணைப்பு, மின்-ஆளுமை மற்றும் நிதி தொழில்நுட்பத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை அடைந்துள்ளது.

## அடித்தளம் (2004-2010)

2004ஆம் ஆண்டில், ஆளும்தரப்பு ஐ.சி.ரி. உள்கட்டமைப்பை விரிவுபடுத்துவதையும் பொது சேவைகளை டிஜிட்டல் மயமாக்குவதையும் நோக்கமாகக் கொண்டு முயற்சியைத் தொடங்கியது. தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப நிறுவனத்தின் (ICTA) உருவாக்கம் இந்த மாற்றத்தில் முக்கிய பங்கு வகித்தது, டிஜிட்டல் கல்வியறிவை ஊக்குவித்தல் மற்றும் நிர்வாக செயல்திறனை மேம்படுத்துதல். அலைபேசி (மொபைல் போன்) பயன்பாடு அதிகரித்தது, ஆனால் இணைய அணுகல் பெரும்பாலும் நகர்ப்புறத்தையே மையமாகக் கொண்டிருந்தது.

## ஏற்றம் (2011-2019)

3ஜி மற்றும் 4ஜி வலையமைப்புகளின் அறிமுகம் நிகழ்நிலை (ஆன்லைன்) தளங்களின் பயன்பாட்டை துரிதப்படுத்தியது. வணிகங்கள் மின் வணிகம் மற்றும் டிஜிட்டல் வங்கி முறைக்குத் திரும்பின, அதே நேரத்தில் ஆளும்தரப்பு நிர்வாகச் செயல்முறைகளை நெறிப்படுத்த லங்கா அரசு நெட்வொர்க் (ஸிறூஹி) மற்றும் லங்காபே போன்ற முக்கிய மின்-ஆளுமை முயற்சிகளை அறிமுகப்படுத்தியது. குடிமக்கள் நிகழ்நிலையில் வரி செலுத்துதல்கள், டிஜிட்டல் நிலப் பதிவு மற்றும் மின்னணு தேசிய அடையாள அட்டைகள் (e-NIC) ஆகியவற்றின் மூலம் பயனடைந்தனர். இதற்கிடையில், சமூக ஊடகங்கள் மற்றும் டிஜிட்டல் சந்தைப்படுத்தல் என்பன செழித்து வளர்ந்தன, இது இலங்கையின் வளர்ந்து வரும் தொழில்நுட்ப தொடக்கக் காட்சிக்கு வழி வகுத்தது.

## கோவிட்-19 ஊக்கி (2020-2025)

கொரோனா பெருந்தொற்று விரைவான டிஜிட்டல் தழுவலை கட்டாயப்படுத்தியது. பாடசாலைகள் மின் கற்றல் தளங்களுக்கு மாறினு, வணிகங்கள் தொலைதூர வேலை அல்லது வீட்டிலிருந்தபடியே வேலைசெய்வது மற்றும் மின் வணிகத்தை நம்பியிருந்தன. அலைபேசி வங்கிச் சேவை மற்றும் டிஜிட்டல் கொடுப்பனவுகள் பிரதான நீரோட்டமாக மாறின. அனால், நிதியியல் தொழில்நுட்ப (ஃபின்டெக்) துறை வளர்ச்சியடைந்தது. டெலிமெடிசின் சேவைகள் விரிவடைந்தன, அதே நேரத்தில் 2023இல் 5ஜி தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டது, செயற்றை நுண்ணறிவு (AI)- மூலம் வழிபடுத்தப்பட்ட புத்தாக்கங்கள், புதுமைகள் மற்றும் ஸ்மார்ட் சிட்டி தீர்வுகளுக்கான கதவுகளைத் திறந்தது.

## சவால்கள் மற்றும் முன்னேற்றம்

விரைவான முன்னேற்றங்கள் இருந்தபோதிலும், இலங்கை இன்னும் டிஜிட்டல் சவால்களை எதிர்கொள்கிறது, குறிப்பாக இணைய ஊடுருவல் மற்றும் எழுத்தறிவு குறைவாக இருக்கும் கிராமப்புறங்களில். சைபர் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் மற்றும் தரவு பாதுகாப்பு கவலைகளுக்கும் அவசர கவனம் தேவை. பொருளாதார உறுதிப்பாடின்மை அவ்வப்போது டிஜிட்டல் கொள்கைச் செயல்படுத்தலைத் தடுத்து நிறுத்துகிறது, இது நிலையான நிர்வாகம் மற்றும் முதலீட்டின் அவசியத்தை எடுத்துக்காட்டுகிறது.

## எதிர்காலம்

இலங்கையை தகவல் தொழில்நுட்ப ஏற்றுமதிகள், தொடக்கநிலை சுற்றுச்சூழல் அமைப்புகள் மற்றும் டிஜிட்டல் உள்கட்டமைப்பு மேம்பாடு என்பவற்றில் கவனம் செலுத்தும் ஒரு பிராந்திய தொழில்நுட்ப மையமாக உயர்த்த முடியும் என்று ஆளும்தரப்பு கருதுகிறது. செயற்கை நுண்ணறிவு மற்றும் திறன் (ஸ்மார்ட்) ஆளுகை ஆகியவற்றில் தொடர்ந்து முதலீடு செய்வதன் மூலம், இலங்கை டிஜிட்டல் மயமாக்கலை அன்றாட வாழ்வில் மேலும் ஒருங்கிணைக்கத் தயாராக உள்ளது.

தொடக்கத்திலிருந்து இன்றைய மாறும் டிஜிட்டல் நிலப்பரப்புவரை, நாட்டின் பயணம் தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கான உறுதிப்பாட்டையே பிரதிபலிக்கிறது. சவால்கள் தொடர்ந்தாலும், இலங்கையின் டிஜிட்டல் எதிர்காலம் நம்பிக்கைக்குரியதாகத் தோன்றுகிறது, இது தெற்காசியாவில் பொருளாதார வளர்ச்சி மற்றும் புதுமைகளைக் கொண்டு வரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

# மகளிர் விவகார அமைச்சரிடம் 5 கோரிக்கைகளடங்கிய மகஜர்

## குடிசார் அமைப்புக்களின் சம்மேளனங்களால் கையளிப்பு

(சுபேசன்)



வடக்கு மாகாண குடிசார் அமைப்புக்களுடையசம்மேளனங்களால் மகளிர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜிடம் ஐந்து கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் யாழ் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற மகளிர் தின நிகழ்வின் போதே மேற்படி கோரிக்கைகள் அடங்கிய மகஜரை அமைச்சரிடம் கையளித்திருந்தனர்.

குடிசார் அமைப்புக்களின் சம்மேளனங்கள் அமைச்சரிடம் கையளித்த மகஜரில்; -

வடக்கு மாகாண உள்ளூராட்சி மன்ற மகளிர் உறுப்பினர்களுடைய ஒன்றியத்தை நிறுவன ரீதியாக மேம்படுத்துவதுடன்-அரசியலில் போதுமான பெண்கள் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்ய வேண்டும். அத்துடன் கட்சிகளின் மத்திய மற்றும் நிர்வாகக்குழுக்களில் பெண்களை உள்ளீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொதுப் போக்குவரத்தின் போது பெண்களுடைய பாதுகாப்பினை உறுதி செய்ய வேண்டும்.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் பேருந்து மற்றும் புகையிரதத்தில் பயணம் செய்யும் பெண்களில் 90சதவிகிதமான பெண்கள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு முகம் கொடுக்கின்றனர். இவ்வாறான பாலியல் ரீதியான துன்புறுத்தல்களைக் குறைப்பதற்கு போக்குவரத்துத்துறை ஊழியர்களுக்கு பால்நிலை அடிப்படையிலான பயிற்சிகளை வழங்க வேண்டும்.

பெண்களுடைய பொருளாதார வளங்களை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக சில கடன் உதவிகளின் போது ஆண்களின் ஒப்புதல் தேவைப்படுகிறது. அவ்வாறான சில விதிமுறைகளை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பாலின அடிப்படையிலான வன்முறைகளைத் தடுத்து நீதி அணுகலை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

குறிப்பாக வடக்கு மாகாணத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களில் தமிழ் பேசும் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களை அதிகரிக்க வேண்டும்.

மேலும் கிளிநொச்சி, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் பெண்களுக்கான பாதுகாப்பு இல்லங்களை நிறுவ வேண்டும்.

அத்துடன் வன்முறைகளுக்கு முகம்கொடுக்கும் பெண்களுக்கு இலவச சட்ட உதவிகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இரண்டுவயதுக்குழந்தைகளை வேறு நபர்களின் பராமரிப்பில் விட்டு விட்டு தாய்மார்கள் தொழில் தேடி வெளிநாடு செல்வதால் குழந்தைகள் பல்வேறு வகையான பாதிப்புக்களை எதிர்கொள்கின்றனர்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் அனுமதியை 2 வயதில் இருந்து 5 வயதாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதனை விட முக்கியமாக நாட்டிற்குள்ளேயே சிறந்த வருமானத்தை ஈட்டக்கூட்டிய வருமான வழிமுறைகளை பெண்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்து புலம்பெயர்வைக் கட்டுப்படுத்தி குழந்தைகளின் நலனைப் பேண நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆகிய ஐந்து கோரிக்கைகளை மகளிர் விவகார அமைச்சரிடம் முன்வைத்திருந்தனர்.

மேற்படி மகஜரை யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த குடிசார் அமைப்புகளின் சம்மேளனப் பிரதிநிதிகள் வழங்கி வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர் Kalaikkathir

## படையினர்.....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில்நேற்றுவரவு,செலவுத் திட்டத்தின் வெளிவிவகாரம், வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் மற்றும் சுற்றுலாத்துறை அபிவிருத்தி அமைச்சு மீதான விவாதத்தில் உரையாற்றியபோது இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ராஜபக்சக்களைரணில்விக்கிரமசிங்கவே பாதுகாத்தார்என்றுநாடாளுமன்றஉறுப்பினர் சாணக்கியன் குறிப்பிட்டிருந்தார். எங்களுக்கு எதிராகவே ரணில்விக்கிரமசிங்கசெயற்பட்டார்.

அதிகளவில் வழக்குகளை தாக்கல் செய்தார். நல்லாட்சிக் காலத்தில் ஊழல் ஒழிப்பு அலுவலகத்தின் செயலாளராக பதவி வகித்த ஆனந்த விஜேபால தற்போது பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராகச் செயற்படுகிறார். அந்த வழக்குகளில் இருந்து நாங்கள் நீதிமன்றத்தினால்தான் விடுதலை செய்யப்பட்டோம்.

கடந்த காலங்களில் ரணில் விக்கிரமசிங்க நாட்டின் இறையாண்மைக்கு எதிராகச் செயற்பட்டார். ஆனாலும் தற்போது சர்வதேச ஊடகங்களில் அவர் நாட்டை காட்டிக்கொடுக்காதது தொடர்பில் மகிழ்ச்சியடைகின்றோம்.

எமதுஅரசியல்மாற்றங்கள்தனியானவை. நம்மிடையே நட்பு உண்டு. 2005இல் ஒரே மேடையில் இருந்தோம். 2015இல் நீங்களும் ரணிலும் ஒரே மேடையில் இருந்தீர்கள். இப்போது பட்டலந்த அறிக்கையை நீங்களே முன்வைக்கின்றீர்கள். அன்று அந்த அறிக்கையை மறைத்து வைத்துக்கொண்டு இருந்தீர்கள்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுடன் 2005இல் உடன்படிக்கை கைச்சாத்திடும்போது குறித்த அறிக்கையை நாடாளுமன்றத்தில் முன்வைக்கவேண்டும் என்று கேட்கவில்லை. முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கவின் அமைச்சரவையிலும்இருந்தீர்கள். அப்போதும் பட்டலந்த அறிக்கை தொடர்பில் பேசவில்லை. ஆனால் இப்போது சர்வதேச ஊடகம் கேட்டதும் அந்த அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளீர்கள்.

நாங்கள் நாட்டைப் பாதுகாக்கவேண்டும். நாட்டின் முன்னாள் தலைவர் ஒருவர் வெளிநாட்டுக்கு சென்று எமது படையினர் போர்க் குற்றத்தில் ஈடுபட்டனர் என்பதனை பகிரங்கமாக ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு சென்றால் மகிந்த ராஜபக்சவுக்கோ, ரணில் விக்கிரமசிங்கவுக்கோ பாதகமாக அமையாது, முழு நாடும் நெருக்கடிக்குள்ளாக நேரிடும்.

நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், படயினர் மீது கடுமையான குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றார். படையினர் போர்க் குற்றத்தில் ஈடுபட்டனர் என்பது மட்டுன்றி பாலியல் வன்கொடுமைகளிலும் ஈடுபட்டனர் எனவும் கூறுகின்றார். ஏதேனும் சம்பமொன்று முன்னாள் இராணுவ சிப்பாயால் நடந்திருக்கலாம். ஒரு நபரின் செயற்பாட்டை முழுப் படையினருடனும் தொடர்புபடுத்த வேண்டாம்.

இங்கே சாணக்கியன் முன்வைத்த குற்றச்சாட்டுகள் காலத்திற்கு பொருத்தமானது அல்ல. இராணுவத்தினர் அன்று போர் செய்தனர். அதன்போது ஏதேனும் சம்பவம் இடம்பெற்றிருந்தால் அது தொடர்பில் விசாரணை செய்வதல்ல பிரச்சினை, இதனை அரசியல் விடயமாக மாற்றி, வருடங்கள் பலவற்றுக்கு பின்னரும் இதுபற்றி கூறிக்கொண்டு போனால் 1988இல் நடந்த சம்பவத்தை 2028இலும் கதைப்போம் என்றால், 2009இல் நடந்தவற்றை 2048இலும் கதைக்க தயாராவோம் என்றால் அதனூடாக இந்த சமுகத்தில் வெறுப்புணர்வு உருவாகுவதை நிறுத்த முடியாது. வெறுப்புணர்வற்ற அரசியலை இங்கே கட்டியெழுப்ப வேண்டுமாயின் அரசு என்ற விடயத்தில் நாம் எல்லோரும் ஒரே நிலைப்பாட்டில் இருக்கவேண்டும்.

பாதாளஉலகக்கும்பலைஒழிக்கநடவடிக்கை எடுக்கப்படும் போது பிலிப்பைன்ஸில் நடந்ததை போன்று மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக உங்களை நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல நாங்கள் இடமளிக்கப் போவதில்லை. இதனால் இறுதியில் நாடே வீழ்ச்சியடையும் - என்றார்.

## போர்க்குற்ற...

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆளும்தரப்பு ஏன் பயப்படவேண்டும் என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமானகஜேந்திரகுமார்தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில்நேற்று வரவு செலவுத் திட்டத்தின் வெளிவிவகாரம், வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் மற்றும் சுற்றுலாத்துறை அபிவிருத்தி அமைச்சு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன மோதல்கள் தொடர்பில் வெளிவிவகாரத்துறை அமைச்சு முக்கிய பங்கு வகிக்கின்றது. கடந்த காலங்களில் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் தொடர்பாக இந்த அமைச்சால் பல பொய்கள் பரப்பப்பட்டுள்ளன. இந்த ஆளும்தரப்பு வருவதற்கு முன்னரும் இந்த அமைச்சு இவ்வாறுதான் இருந்தது. தமிழ் மக்கள் உரிமைகளைக் கோரிப் போராட்டம் நடத்தியபோதுஅதனைப்பயங்கரவாதம்என்று இந்த அமைச்சின் ஊடாகவே பரப்புரைகள் முன்னெடுக்கப்பட்டன.

தேசிய மக்கள் சக்தி தலைமையிலான ஆளும்தரப்பு பதவியேற்றதன் பின்னர் அந்த நடவடிக்கைகள் மாற்றியுள்ளதா என்ற கேள்விகள் எழுகின்றன. இன மோதல்கள் தொடர்பான அமைச்சின் அணுகுமுறை என்ன? எவ்வாறு இதுவிடயத்தில் வெளியுறவுக் கொள்கைகளை இந்த அமைச்சு பேணப் போகின்றது என்ற கேள்விகள் எழுகின்றன. அத்துடன் தமிழ் மக்கள் தொடர்பில் சர்வதேசத்தில் எழும் கரிசனைகளுக்கு அமைச்சு எவ்வாறு எதிர்வினையாற்ற போகிறது என்பதனையும் பொறுத்திருந்து பார்க்கவேண்டும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைக்கான உயர் ஆணையரால் 2015ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அறிக்கை முக்கியமானது. "இலங்கையில்குற்றவியல்சட்டநடவடிக்கைகள் மற்றும் மனித உரிமை மீறல் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு வலுவான சட்டக் கட்டமைப்பொன்று இல்லை, இலங்கையில் சாட்சியாளர்களை பாதுகாப்பதற்கான நம்பகமான சட்டமில்லை'' என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன் அரச பாதுகாப்பு மற்றும் நீதித்துறை திரிபுப்படுத்தப்பட்ட நிலையில் உள்ளது என்றும், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அர்ப்பணிப்புகள் தொடர்பிலும் பல கேள்விகள் உள்ளதாகவும் குறிப்பிட்டிருந்தார். இதனாலேயே கலப்பு நீதிமன்றத்தை அமைக்கவேண்டும் என்றும், இதில் சர்வதேச நீதிபதிகளும் வழக்கறிஞர்களும் விசாரணைகளில் பங்கெடுத்து மனித உரிமைகள் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பான விடயங்களை ஆராயும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்றும், இலங்கையில் கொல்லப்பட்டவர்களுக்கு இந்த கலப்பு பொறிமுறை கட்டாயம் தேவைப்படுகின்றது என்றும் நிலைமாறுகால நீதிவழங்கல் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கப்படவேண்டும் என்றும் ஆணையர் தனது அறிக்கையில் தெரிவித்திருந்தார்.

அந்த அறிக்கையின் பின்னர் 2016ஆம் ஆண்டில் இலங்கை ஆளும்தரப்பு இந்தத் தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்க முன்வந்தபோதும் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியான பின்னர் அதிலிருந்து பின்வாங்கி அப்போதைய வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஊடாக அந்தத் தீர்மானத்தை எதிர்தார்.

இதன்போது சர்வதேசதலையீட்டைதடுக்க உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவை அமைப்பது தொடர்பிலும் உள்நாட்டுப்பொறிமுறை தொடர்பிலும் அவர் குறிப்பிட்டார். கோட்டாபய ராஜபக்ச, மகிந்த ராஜபக்ச ஆகியோரிடம் இருந்து இவ்வாறான பொறிமுறையை எதிர்பார்த்திருக்க முடியாது. என்றாலும் ரணில் விக்கிரமசிங்க இணை அனுசரணை வழங்க முன்வந்தார். பின்னர் அதிலிருந்து பின்வாங்கியிருந்தார்.

இந்த நாட்டில் நல்லிணக்கம் உருவாக வேண்டுமாயின், என்ன நடந்தது என்று ஆராய வேண்டும். அந்த நடவடிக்கை நம்பகத்தன்மையானதாக இருக்கவேண்டும். அது உள்நாட்டுப் பொறிமுறையாக இருக்கமுடியாது. சகலவற்றையும் உள்ளடக்கிய பொறிமுறையும், விசாரணை செயன்முறைகளும் முன்னெடுக்கப்பட வேண்டும். இதுவே குறைந்தபட்சத் தகுதியாக இருக்கின்றது.

இந்நிலையில் தற்போதைய ஆளும்தரப்பு கடந்தகாலஆளும்தரப்புகளின்நடவடிக்கைளில் இருந்து விடுபட்டுவிட்டதா என்ற கேள்விகள் எழுகின்றன. இந்த ஆளும்தரப்பு அதனை விடவில்லை என்பதே எனது கருத்தாக உள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச காலத்தில் மக்கள் விடுதலை முன்னணி இராணுவத் தீர்வை காண்பதில் தீவிரமாக இருந்தது. உண்மையில் இந்த ஆளும்தரப்பு பொறுப்புக்கூறும் செயன்முறைக்கு ஆதரவளிக்குமா என்று பார்க்கவேண்டும். இந்தப் பிரச்சினையின் தன்மையைப் பார்க்கும்போது உள்ளகப்பொறிமுறைதீர்வாக அமையாது. கடந்த காலங்களில் இனவாத ஆட்சியாளர்களே பதவியில் இருந்தனர். தமிழ் மக்களுக்கு எதிராக தொடர்ச்சியாக தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. உண்மையில்பிரச்சினைகளுக்குதீர்வுகாண வேண்டுமானால் கடந்த 77 வருடங்களாக ஆளும்தரப்புக்கள் முன்னெடுத்துச் சென்றவற்றை கைவிடவேண்டும். நீங்கள் ஏன் வெளிநாட்டு பொறிமுறைக்குப் பயப்படவேண்டும். முதலில் உண்மையை கண்டறியவேண்டும். நல்லிணக்கத்தை கொண்டுவர இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். ஆகவே கடந்த ஆட்சியாளர்கள் கடைப்பிடித்த போக்கினை தற்போதைய ஆளும்தரப்பு தொடர கூடாது - என்றார்.

## குழு....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவின் தலைவராக வடமேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் சம்பத் இந்திக குமார நியமிக்கப்பட்டுள்ளார்.

மார்ச் 10 அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் கடமை நேரத்தில் பெண் மருத்துவர் ஒருவர் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட சம்பவத்தை அடுத்தே இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலை ஊழியர்களுக்கான பாதுகாப்பு மற்றும் வசதிகள் இல்லாததாலும், வைத்தியசாலையின் அசையும் மற்றும் அசையா சொத்துக்களை முறையாக நிர்வகிக்க தவறியதாலும் இந்தச் சூழ்நிலைகள் உருவானதாகக் கூறப்படுவதை அடுத்து அது பற்றி விசாரிக்கக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவின் அறிக்கையை மார் 24க்கு முன்னர் அமைச்சின் செயலாளரிடம் சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொலை....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில்கொலை, கொள்ளைகலாசாரத்தை ஜே.வி.பி. தான் முதன் முதலில் ஆரம்பித்தது. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஜே.வி.பி.தான் இவற்றைக் கற்றுக்கொடுத்தது. 1984, 1985களில் ஜே.வி.பியிலிருந்து கொண்டு அதன் செயற்பாடுகளுக்கு ஒத்துழைக்காதவர்கள் அந்தக்கட்சினராலேயே கொல்லப்பட்டனர். எனவே தற்போது நாட்டில் இடம்பெற்று வரும் துப்பாச்சூடுகள், வாள் வெட்டுக்களை கட்டுப்படுத்தக் கூடிய இயலுமையும், அனுபவமும் ஜே.வி.பியிடமே உள்ளது. எனவே இந்த கொலை, கொள்ளை கலாசாரத்தை உடனடியாக முடிவுக்கு கொண்டு வருவதற்கு ஆளும்தரப்பு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தலைமறைவாகுமளவுக்கு ஒன்றும் இடம்பெறவில்லை. அவர் தலைமறைவாகாமல் இருந்திருந்தால் கைது செய்யப்பட்டிருந்தாலும், பிணையில் விடுதலையாகியிருக்கலாம். எவ்வாறிருப்பினும் அவர் ஓரிரு தினங்களில் வெளியே வருவார். அவர் இந்தளவுக்கு அச்சப்பட வேண்டிய அவசியமும் இல்லை.

நான் அரசியலிலிருந்து ஓய்வு பெறுவதற்கான காலம் வந்துவிட்டது. எனவே உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் என்ன நடக்கும் என்பதை பார்த்துக் கொண்டிருக்கின்றேன் - என்றார்.

## கொலைக்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூதூர் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ள கொலைகள் தொடர்பில் அதில் குறிப்பிட்டேன். அதன்பின்னர் அம்பலங்கொடைபிரதேசத்தில் ஒரு கொலை இடம்பெற்றுள்ளதுடன் கொழும்பு கிராண்பாஸ் பகுதியில் இரண்டு படுகொலைகள் இடம்பெற்றுள்ளன.

இந்தக் கொலைகளால் பொது மக்களின் பாதுகாப்பு தொடர்பில் பெரும் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. அதேபோன்று நேரடியாகவும் மறைமுகமாகவும் எமது சுற்றுலாத்துறைக்கும் இதனால் பெரும் பாதிப்பு. அதனால் நாட்டில் செயற்பட்டுவரும் மிலேச்சத்தனமான படுகொலைக் கலாசாரத்தை இல்லாதொழிப்பதற்கு துரித வேலைத்திட்டம் ஒன்றை சட்டம் ஒழுங்கு அமைச்சு ஊடாகக் கட்டாயமாக மேற்கொள்ளவேண்டும்.

முன்னாள் பதில் பொலிஸ் மா அதிபரை இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை. அதேபோன்று நீதிமன்றதில் இடம்பெற்ற மனிதக் கொலையை திட்டமிட்டவர் என்று தெரிவிக்கப்படும் பெண்ணையும் கண்டுபிடிக்க முடியாமல் போயிருக்கிறது. நாள்தோறும் இடம்பெறுகின்ற இந்த மிலேச்சத்தனமான மனிதப் படுகொலைக் கலசாரத்துக்கு முடிவில்லையா? இதற்கு தீர்வில்லையா? இந்த நிலமையால் நாட்டு மக்கள் கடுமையாக பாதுகாப்பற்றதன்மைக்கு ஆளாகியிருக்கின்றனர்.

அதனால் இதுதொடர்பில் ஜனாதிபதி உள்ளிட்ட ஆளும்தரப்பு கவனம் செலுத்தி தெளிவானதீர்வொன்றைவழங்கவேண்டும். அதற்கான தீர்வு என்ன என்பதை நாட்டுக்கு வெளிப்படுத்தவும்நடவடிக்கைஎடுக்கவேண்டு மென கேட்டுக்கொள்கிறேன் -என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# வவுனியாவின் 5 உள்ளூராட்சி மன்றங்களிலும் போட்டியிட கட்டுப்பணம் செலுத்தியது மஸ்தான் எம்.பியின் கங்காரு



வவுனியாமாவட்டத்தின் 5உள்ளூராட்சிசபைகளிலும் போட்டியிட வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் அவர்களின் இலங்கை தொழிலாளர் கட்சி வவுனியாமாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகத்தில்கட்டுப்பணம் செலுத்தியது.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை கட்டுப்பணம் செலுத்த முடியும்.

அதற்கமைவாக, வவுனியாமாவட்டத்தின் வவுனியா மாநகரசபை, வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை, வவுனியா வடக்கு பிரதேச சபை, வெண்கலசெட்டிகுளம் பிரதேசசபை, வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை ஆகிய ஐந்து உள்ளூராட்சி மன்றங்களிலும் இலங்கை தொழிலாளர் கட்சி கங்காரு சின்னத்தில் போட்டியிடவுள்ளது.

அதற்கான கட்டுப்பணத்தை கட்சி முக்கியஸ்தர்கள் வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் அலுவலகத்தில் செலுத்தியிருந்தனர். 100

# மட்டு. சந்திவெளி காட்டில் ஆண் சிசு சடலமாக மீட்பு

மட்டக்களப்பு சந்திவெளி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மொறக்கொட்டாஞ்சேனையில் உள்ள காட்டு பகுதியில் நேற்று சனிக்கிழமை ஆண் சிசு ஒன்று சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக சந்திவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

காட்டு பகுதியில் ஆண் சிசு ஒன்று சடலமாக கிடப்பதை கண்ட பிரதேச மக்கள் பொலிஸாருக்கு உடனடியாக தகவல் வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த சந்திவெளி பொலிஸார் சிசுவின் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

இந்த ஆண் சிசுவை பெற்றெடுத்த தாய், சிசுவை உரைப்பையில் கட்டி அதனை மொறக்கொட்டான்சேனை காட்டு பகுதியில் வீசிவிட்டு சென்றுள்ளதாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலும், இந்த ஆண் சிசு சம்பவதினத்தன்று பிறந்துள்ளதாகவும் சிசுவின் தாயை தேடும் பணியில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சந்திவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பாடசாலை மாணவர்களுக்கான ‘கற்பகச் செல்வம்’ அறிமுகம்

## பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் சகாதேவன் தெரிவிப்பு

(சுபேசன்)

‘கற்பகச் செல்வம்’ என்ற திட்டம் பனை அபிவிருத்திச் சபையினால் ஆரம்பித்து வைக்கப்பட்டிருப்பதாக சபையின் தலைவர் வி.சகாதேவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்;

பாடசாலை மாணவர்கள் பனை சார்ந்த ஆராய்ச்சிகளில் ஈடுபடும் செயற்திட்டம்ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது.

இதன்போதுபாடசாலைமாணவர்களுக்கு பனைசார்ந்தமற்றும்அதன்உற்பத்திகள்சார்ந்த ஆராய்ச்சி விளக்கம் மற்றும் செயன்முறை ஆகிய பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

இந்த திட்டத்தின் ஆரம்ப நிகழ்வாக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் உயிரியல் பிரிவு மாணவர்கள் கைதடியில் அமைந்துள்ள பனை ஆராய்ச்சி நிறுவனத்திற்கு வருகைதந்து பனை சார்ந்த புத்தாக்க சிந்தனைகளை வளர்த்துக் கொண்டுள்ளனர்.

மாணவர்கள்பனைசார்ந்தஆராய்ச்சிகளில்



ஆர்வமாக இருப்பது மகிழ்ச்சியளிக்கின்றது.

இளைய தலைமுறை இவ்வாறான விடயங்களில் ஆர்வம் காட்டுவதன் ஊடாக எமது வளத்தைப் பேணிப் பாதுகாத்து அதன் மூலம் சிறந்த வருமானத்தைப் பெறுவதுடன் அதனை அடுத்த சந்ததியினருக்கும் கடத்த முடியும்:- எனமேலும்அவர்தெரிவித்திருந்தார்.

# புதுக்குடியிருப்பில் விபத்து ; இளைஞன் உயிரிழப்பு

புதுக்குடியிருப்பு பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞன் ஒருவன் உயிரிழந்துள்ளார் என புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் சூரியவெளி - நாவாந்துறை பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞனே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில் -

உயிரிழந்த இளைஞன் தேவாலயம் ஒன்றில் பணி செய்வதற்காக 28ஆம் திகதி கிளிநொச்சிக்கு சென்றுள்ள நிலையில் கடந்த 12ஆம் திகதி மீண்டும் வீடு நோக்கி பயணித்துக்கொண்டிருந்துள்ளார்.

இதன்போது இந்த இளைஞன் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்திற்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ் ஒன்றை கடந்து முன்னோக்கிச் செல்ல முயன்ற போது எதிர்த்திசையில் பயணித்த பட்டா ரக வாகனத்தில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளார்.

விபத்தில் காயமடைந்த இளைஞன் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில் மேலதிக சிகிச்சைக்காக மாஞ்சோலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

பின்னர் இந்த இளைஞன் மாஞ்சோலை வைத்தியசாலையிலிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ள நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

# மூதூர் அஹதிய்யாவின் 50 வருடத்தை முன்னிட்டு இலட்சினை வெளியீடு

(ஜிப்ரான்)

இலங்கைத்திருநாட்டின்பழைமைவாய்ந்த அஹதியாக்களில்ஒன்றாகவும்திருகோணமலை மாவட்டத்தின் முதன்மை அஹதியாவுமான மூதூர் மத்திய அஹதியா தனது 50 ஆவது ஆண்டில் தடம் பதித்திருக்கின்றது. அல்ஹம்துலில்லாஹ்.

இந்நிகழ்வைபிரதிபளிக்கும்முகமாகநேற்று (சனிக்கிழமை) திருகோணமலை மாவட்ட அஹதியாக்கள் சம்மேளனத்தின் தலைவர் அஷ்ஷேஹ் மவை.ஹதியதுல்லஹ் மௌலவி அவர்களால் மூதூர் மத்திய அஹதியாவின் பொன்விழா இலட்சினையானது வெளியீடு செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் மூதூர் மத்திய அஹதியாவின் தலைவர் எ.ம அர்ஷத், உப தலைவர் ஹாபில் மௌலவி, செயலாளர் எ.ம. நுஸ்கி மௌலவி, உப செயலாளர் அயாஸ் மௌலவி மற்றும் ஞாயிறு பாடசாலையின் உப அதிபர் நிஷ்பாக் மௌலவி ஆகியோர் கலந்துகொண்டனர்.





காலைக்கதிர் Kalaikkathir

# நாடாளுமன்ற உறுப்பினர் பதவி சுழற்சி முறையில் வழங்கப்படும்

## ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் ஊடகங்களுக்கு தெரிவிப்பு

முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயம் நிசாம் காரியப்பர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் எம் எஸ் நலீம் தன்னுடைய பதவியை ராஜினாமாச் செய்தது முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் சரித்திரத்தில் மாத்திரம் அல்ல இலங்கை முஸ்லிம் அரசியல் சரித்திரத்திலும் ஒரு தாக்கத்தை உருவாக்கிய நிகழ்வாகும்.

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் செயலாளர் நாயகமும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில் -

கட்சிக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் மற்றும் மக்களுக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றியது சம்பந்தமாக முன்னுதாரணமாக இருந்தது மாத்திரமல்ல ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சரித்திரத்தில் அக்கட்சியின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு தனக்கு வழங்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை நாலு மாதங்களுக்குள் ராஜினாமா செய்த வரலாற்றில் இது முதல் தடவையாகும்.

இக்கட்சியின் செயலாளர் என்ற வகையில் நான் மிகவும் பெருமிதமும், மகிழச்சியும் அடைந்துள்ளேன். கட்சி சார்பாக என்னுடைய நன்றிகளை அவருக்கு தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

மேலும் இந்த வெற்றிடமான நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடியும் வரை எவருக்கம் வழங்கப்பட மாட்டாது. மாறாக இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் முக்கியமாக அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி தங்களது பிரதேசத்துக்கு கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பவர்கள் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தங்களுடைய செல்வாக்கை பயன்படுத்தி தமது சபைகளை கைப்பற்றி ஆட்சியை அமைக்க வேண்டும். அதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்து பணியாற்ற வேண்டும் என எதிர்பார்க்கின்றோம்.

இந்த நாடாளுமன்ற உறுப்பினர் பதவி சுழற்றி முறையில் ஒருவருடத்திற்கென்ற முறையில் பகிர்ந்தளிக்கப்படும். அதனை கட்சி தீர்மானித்துள்ளது. அந்த வகையில் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் தவிசாளர்கள், உயர்பீட உறுப்பினர்கள் தங்களது சபைகளை வெல்ல வைத்தால் கட்சி உங்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத்தந்து உங்களையும், உங்களது பிரதேசத்தையும் கௌரவப்படுத்தும் எனவும் தெரிவித்தார்.

# கரப்பந்தாட்டப் போட்டி கரைச்சியில் ஆரம்பம்



கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான கரபந்தாட்ட தொடர் கிளிநொச்சியிலுள்ள வடமாகாண விளையாட்டு கட்டடத்தொகுதியின் உள்ளக அரங்கில் ஆரம்பமாகியது.

நேற்றைய ஆரம்ப நாள் நிகழ்வு கரைச்சி பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் போல் ராஜ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கரைச்சி பிரதேச செயலக உதவிப்பிரதேச செயலாளர் எஸ்.பத்மசிறீ கலந்து கொண்டு வீரர்களை அறிமுகம் செய்து போட்டிகளை ஆரம்பித்து வைத்தார். 18 கழகங்கள் குறித்த போட்டியில் பங்குபற்றுகின்றன. 113






# அம்பாறையில் பொது அமைப்புகள் தேர்தலில் கட்டுப்பணம் செலுத்தின

(அபு அலா, முபீன்)

நுஜா ஊடக அமைப்பு மற்றும் பல பொது அமைப்புகளை முன்னிலைப்படுத்தி அட்டாளைச்சேனை பிரதேச சபைக்கு சுயேட்சைக் குழுவில் போட்டியிடுவதற்காக வெள்ளிக்கிழமை அம்பாறை மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் காரியாலயத்தில் கட்டுப்பணத்தை செலுத்தியது.

நுஜா ஊடக அமைப்பின் தலைவரும், சிரேஸ்ட ஊடகவியலாளருமான எஸ்.எம்.அறூஸ் தலைமையில் சுயேட்சைக் குழவிற்கான கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.

இதன்போது, சுயேச்சைக்குழுவின் ஆலம்குளம் இணைப்பாளரும், எஸ்டோ அமைப்பின் கள உத்தியோகத்தருமான சப்ராஸ் உள்ளிட்ட குழுவினர் பங்கேற்றிருந்தனர்.

இந்த சுயேச்சைக் குழுவில் சிரேஸ்ட



ஊடகவியலாளர்கள், சமூக சேவையாளர்கள,; பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள், உலமாக்கல், பெண்கள், இளைஞர்கள் என பலரும் போட்டியிடவுள்ளனர்.

ஊழல், மோசடியில்லாத சிறந்த நிருவாக ஆட்சியைக் கொண்டுவர வேண்டும் என்ற பெரும் எதிர்பார்ப்பில் தேர்தலில் போட்டியிட தீர்மானித்துள்ளதாக சுயேச்சைக் குழுவின் முதன்மை வேட்பாளரும், நுஜா ஊடக அமைப்பின் தலைவருமான, சிரேஸ்ட ஊடகவியலாளருமான எஸ்.எம்.அறூஸ் இதன்போது ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அதேவேளை, நிச்சயமாக அட்டாளைச்சேனை பிரதேச சபைக்கு தமது அணியிலிருந்து பலரும் உறுப்பினர்களாகத்



தெரிவு செய்யப்படுவதற்கான வாய்ப்புக்கள் மிக அதிகமாக இருப்பதாகவும், மக்கள் மாற்றத்தை எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# இப்தார் நிகழ்வு

(ஷினாஸ்)

மருதமுனை மனாரியன்ஸ் விங்ஸ் - 06 சமூக சேவைகள்

அமைப்பின் வருடாந்த பொதுக்கூட்டமும் இப்தார் நிகழ்வும் அமைப்பின் முன்னாள் செயலாளர் ஏ.எம்.றஜாத் தலைமையில், மருதமுனை ஒகாசியா ரெஸ்ட் இன் இல் இடம்பெற்றது.

இதன்போது, கடந்தாண்டு நிறைவு கூட்டறிக்கை மற்றும் கணக்கறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதோடு 2025 - 2026ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது.

சமூகசேவை அமைப்பில் 15வருடநிறைவைக் கொண்ட மனாரியன்ஸ் விங்ஸ் ’06 சமுக சேவைகள் அமைப்பின் புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் - ஏ.எம்.வசீம்
செயலாளர் - ஏ.ஆர் .நிஸ்பாக் அஹமட்
உபதவைர் - எம்.ஐ.எம்.முனீப்



உப செயலாளர் - எஸ்.எச்.எம்.ஜௌசி
பொருளாளர் - ஏ.ஆர் . பர்ஹதுள்ளாஹ்
கணக்காய்வாளர் - எம் .ஜென்சீர்
ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

உயர்பீட உறுப்பினர்களாக என்.எம்.சமீர் ஏ.ஆர்.எம்.பயாஸ், கே.எம்.றினோஸ், ஏ.ஆர்.எம். அனஸ் இ எம் .ஜிஸான் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன்

ஊடகம் - எம்.டப்ளியு.எம்.சாஜத், விளையாட்டு -எம்.ஜெ.அப்ஸான், மருத்துவம் - எம்.றிஸ்வான் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.



காலைக்கதிர்
Kalaikkathir

# மூதூர் தாஹா நகர் இரட்டைக் கொலை

## 15 வயது சிறுமி கைது

(ஜிப்ரான்)

திருகோணமலைமூதூர்பொலிஸ்பிரிவிற்குட்பட்ட தாஹா நகர் பகுதியில் இரு பெண்களை வெட்டிக் கொலை செய்த குற்றச்சாட்டில் பேர்த்தியான 15 வயது சிறுமியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மூதூர் - தாஹா நகர் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து வெள்ளிக்கிழமை அதிகாலை சகோதரிகளான பெண்கள் இருவர் வெட்டு காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டிருந்தனர். சம்பவ இடத்திற்கு மூதூர் நீதிமன்ற நீதிபதி திருமதி தஸ்னீம் பௌசான், சட்ட வைத்திய அதிகாரி, பொலிஸ் உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர் விஜயம் மேற்கொண்டு விசாரணை மேற்கொண்டிருந்தனர்.

குறித்த சம்பவத்தில் சிறிதரன் ராஜேஸ்வரி (வயது 68) சக்திவேல் ராஜகுமாரி (வயது 74) ஆகிய இரு பெண்களே உயிரிழந்துள்ளனர் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மூதூர் தாஹா நகர் பகுதியைச் சேர்ந்த குடும்ப நல மருத்துவமாதாக கடமையாற்றிவரும் சிறிதரன் தர்ஷினி என்பவருடைய வீட்டிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவம் இடம்பெற்ற தினமான வெள்ளிக்கிழமை அதிகாலை சிறிதரன் தர்ஷினி மூதூர் வைத்தியசாலையில் வியாழக்கிழமை இரவுக் கடமைக்காக சென்றிருந்த நிலையில் குறித்த வீட்டில் 15 வயதான அவரது மகள், தாயாரான சிறிதரன் ராஜேஸ்வரி மற்றும் பெரியம்மாவான சக்திவேல் ராஜகுமாரி ஆகியோர் மாத்திரம் வீட்டில் இருந்துள்ளனர்.

இந்நிலையில் அதிகாலை வேளை குறித்த கொலை இடம்பெற்றுள்ளதாகவும் குறித்த படுகொலைச் சம்பவத்தின்போது கூரிய ஆயுதங்களைக் கொண்டு தாக்கியதில் இருவருடைய கழுத்துப் பகுதிகளில் வெட்டுக்காயங்கள் ஏற்பட்டு இருவரும் உயிரிழந்த நிலையில் 15 வயதான மகள் சிறு காயங்களுடன் மூதூர் தள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

இதன்போது குறித்த கொலைச்சம்பவம் தொடர்பில் மேற்படி சிறுமியிடம் பொலிஸார் மேற்கொண்ட நீண்ட நேர விசாரணையின் பின்னர் குறித்த சிறுமி தானே குறித்த கொலையைச் செய்ததாக ஒப்புக் கொண்டுள்ளார். அம்மம்மா தனக்கு ஒரே பேசுவதாகவும், தன்னில் பாசம் இல்லை எனவும் மன அழுத்தம் காரணமாக இருவரையும் கொலை செய்ததாகவும் பொலிஸாரிடம் ஒப்புக் கொண்டுள்ளார்.

இதன் பின்னர் குறித்த சிறுமி பொலிசாரால் கைது செய்யப்பட்டு மூதூர் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்ட பின்னர் திருகோணமலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர்களின் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அனுமதிப்பத்திரம் ஏதுமின்றிக் கடத்திவரப்பட்ட தேக்கமரப் பலகைகள் சம்மாந்துறையில் மீட்பு

(பாறுக் ஷிஹான்)

அனுமதிப்பத்திரம் இன்றி சட்ட விரோதமாக வாகனத்தில் மறைத்து கடத்திவரப்பட்ட தேக்க மரப்பலகைகளை சம்மாந்துறை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இச்சம்பவம் அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புறநகர் பகுதியில் கடந்த வியாழக்கிழமை தகவல் ஒன்றின் அடிப்படையில் சம்மாந்துறை பொலிஸார் மீட்டுள்ளனர்.

அத்துடன் குறித்த தேக்க மரப்பலகைகளை கடத்துவதற்கு பயன்படுத்திய வாகனம் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் இச்சம்பவத்தில் சம்மாந்துறை 03 பகுதியைச் சேர்ந்த 20 வயது மதிக்கத்தக்க சந்தேக நபரும் சம்மாந்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.



குறித்த நடவடிக்கையானது கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே.இப்னு அசாரின் பணிப்புரைக்கமைய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலத்தின் அறிவுறுத்தலுக்கமைய பொலிஸ் நிலைய பெருங்குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி கே.சதீஸ்கரின் வழிகாட்டலில் பொலிஸ் குழு மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.03.2025இல் வெளியிடப்பெற்றது